

"இறைவன்

இப்பிரபஞ்சத்தை இயக்குபவர் அவருடைய சட்ட

முழு மனுகுலத்தின் ஓட்டத்திற்கு ஒப்பற்ற ஒரே செய்தி

இணையதளத்தில் You Tube ல்
தமிழ் : "GOD CREATOR HIS LEGAL MANUAL"
ஆங்கிலம் : "GOD CREATOR HIS LEGAL MANUAL ENGLISH"

எல்லா வேதனைகளில் இருந்தும், வரும் சோதனைகளில் இருந்தும், தப்பிக்க படைத்த இறைவனுடைய மகிமையை, மகத்துவங்களை படித்து கண்டுபிடித்துஅவரிலே நிலை கொள்ளுங்கள்.

<u>இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்</u>

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) <u>இலவசமாக (மத்தேயு 10:8)</u> உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

<u>WhatsApp/SMS:</u> +91 90 190 490 70 / +91 7676 50 5599

<u>Email:</u> wordofgod@wordofgod.in

<u>Wishing you in the mighty name of Jesus Christ</u>

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely <u>free of cost (Matt 10:8)</u> forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

<u>WhatsApp/SMS:</u> +91 90 190 490 70 / +91 7676 50 5599

<u>Email:</u> wordofgod@wordofgod.in

If you like to receive the message in English or this message has enlighten your inner man and brought you closer to "God- The Creator", do share your experience with me.

E-mail to , mpauldas1@gmail.com

mpauldas@rediffmail.com

CELL : +91 9840 861 834 ,

& + 91-44-24993596, + 91-44-24670005

Write to:

M.Paul Das

4th Floor , Sindur Tower

160 / 95,Luz Church Road

Chennai-600 004, INDIA

TO KNOW THE BIRTH OF THE BOOK

(VIDEO IN), **YOUTUBE:** "GOD CREATOR BIRTH OF THE BOOK "

(BOOK & VIDEO IN), **FACE BOOK:** "godcreatorbook"

Message book in English is available in E.L.S Vepery

& E.L.S. Dowton, Chennai, India

Year of Publication-2012

முகவுரை

இந்த செய்தியை கொடுக்க என்னை பாத்திரவான் ஆக்கின தேவனுக்கே எல்லா மகிமையையும் கனமும், துதியையும் ஏறெடுக்கிறேன்.

29/8/2009 அன்று என்னை பேர் சொல்லி அழைத்து, தேவ சித்தத்தை வெளிபடுத்திய தேவ ஊழியர். N. சாது **பால்** சாலமோன் அவர்களுக்கு என் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து, நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

செய்தி கொடுக்க – இழுத்த தேவன் ஏற்படுத்தின தேவ தாசன் ஜாண் **தாஸ்** அவர்களுக்கு என் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். (இந்த செய்தி தேவன் முன் குறித்தது, அத்தியாயம் 16–யை பார்க்கவும்)

இந்த செய்தியை டிவியில் ஒலிபரப்ப என்னை ஏவின திரு. காமராஜ், திரு. சிலம்பரசன், அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த செய்தியை முதலில் கேட்டு உணர்ந்து என்னை ஊக்குவித்த திரு. இன்பராஜ் (Architect) அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த செய்தியை கேட்டு உணர்ந்து என்னை ஊக்குவித்த திரு. விகேஸ் சர்மா, அவர்கள் இந்த செய்தி தன் தாய் தந்தையருக்கும் போய்சேர வேண்டும் என்று காட்டின ஆர்வம், முதலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து புத்தகமாக வெளியிட தூண்டுகோலாக அமைந்தது, அதற்காக நான் தனிப்பட்ட முறையில் அவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மோ. பால் தாஸ்

CREATOR'S VOICE IN WILDERNESS

GOD-THE CREATOR AS SAVIOUR
STRETCHES " **HIS LEGAL MANUA**L" AS
BOW-STRING AND **HIS** MIGHT RELEASE
THE ***ARROW*** "GOD-THE CREATOR OF
THE UNIVERSE -**HIS** LEGAL MANUAL".
THIS ***ARROW*** OF **HIS** VOICE
WILL PENETRATE THE EARTH SPHERE
ALONG ALL DIMENSIONS;CROSSING THE
BARRIERS OF CASTE, CREED,RELIGION,
LANGUAGE. IT ALSO TUNES THE STONEY
HEART OF THOSE WHO FIT TO STRETCH
IN TO FLESHLY HEART, THERE AFTER ONLY
THE THINGS SAID IN **HIS** MANUAL WILL
COME TO PASS.

COMMENTRY BY

"HIS" SCHOLAR VICTOR GNANARAJ, TRICHY.

"THIS IS A FANTASTIC BOOK - - - - - - - - - -
- - - - A SMALL BOOK BUT AN EXCELLENT BOOK ,
MAKE TO TURN ABOUT TO RUN TOWARDS
THE RIGHT TRACK."

TO KNOW THE BIRTH OF THE BOOK

"VIDEO IN C.D." **(or)**

YouTube:(VIDEO) : "GOD CREATOR BIRTH OF THE BOOK "

BOOK IN: FACE BOOK: "godcreatorbook"

"THE BOOK AND IT'S TRACK IS ORGINATED, ORDERLY ALLIGNED AND PERFECTED BY GOD."

பொருள் அடக்கம்

1. அவரே இவர்
2. சட்டப்புத்தகம் யாருக்கு கொடுக்கப்பட்டது
3. சட்டப்புத்தகம் யாருக்குப் புரியும்
4. தேவ இரக்கமும் இரக்கத்தின் ஆழமும்
5. தேவனுடைய சிங்காசனத்தின் அஸ்திவாரம்
6. நீதியின் தேவனின் மகிமை
7. தேவனை அறிகிற அறிவு
8. நீதியின் தேவன் ஏன் பூமி எங்கும் உலாவுகிறார்
9. ஒரு மனிதன் தேவ நீதியில் நடந்தால் என்ன நடக்கும்.
10. தேவனை ஈர்க்கும் நீதியின் கிரியை
11. தேவ எச்சரிப்பு
12. கடைசி கால நிகழ்வுகள்
13. தேவ சிருஷ்டிப்பின் மகத்துவம்
14. தேவ நீதியின் மகத்துவம்
15. தேவ சட்டப் புத்தகத்தின் சாரம்
16. இந்த செய்தி தேவன் முன்குறித்தது
17. அவரே பரிசுத்த பலியான இவர்.

அன்பு வேண்டுகோள்,

உங்கள் வாழ்க்கை–யை பக்கம் **4–ல்**, உங்கள் வாழ்க்கைத்தடத்தை (LIFE TRAJECTORY TRACK) பக்கம் **26–ல்** பார்க்கவும்.

தேவ நீதி என்னை சந்தித்தது

என் விலாசம்: A.J. எபனேசர் - 79, 2வது கைலாச தெரு, நாசரேத், தூத்துக்குடி மாவட்டம், செல் 9787770250

மேற்கண்ட விலாசத்தில் குடியிருக்கும் நான் சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன் அதிகாலை 4 மணியளவில் ஒரு தொழிற்சாலையினுள் **ஒரு பேரொளியையும், பனிமூட்டத்தையும், ஒரு புத்தகத்தையும் கண்டேன்.** நான் அனேகருக்கு அந்த புத்தகத்தை கொடுப்பதையும் பார்த்தேன். அன்று அது என்னவென்று எனக்கு புரியவில்லை, அதன்பின் 2013 ஜீன் மாதத்தில் என் தியானத்தில் தேவ பிரசன்னத்தை உணர்ந்தேன். **"என் நீதி உன்னை சந்திக்கிறது"** என்ற ஒலியை கேட்டேன். தியானத்தை முடித்து வீட்டின் வெளியில் வந்தவுடன் தபால்காரர் புத்தக-தபால் வந்திருக்கிறது என்று கூறி என்னிடம் கொடுத்தார். நான் புத்தகத்தை வாங்கி, அதன் தலைப்பு என்னை ஈர்த்ததால் உடனே படிக்க ஆரம்பித்தேன். தொடர்ந்து என் அம்மா அவர்களும் படித்து உணர்ந்தார்கள் . புத்தகத்தின் வார்த்தை அருமையாகவும், ஆழமாகவும் இருந்தது. நான் புத்தகத்தை எழுதின சகோதரனை தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். சுமார் 30 நிமிட உரையாடலில் தேவனுடைய உள்ளான இருதயத்தில் நிறைந்திருக்கும் இரக்கத்தையும், நீதியையும், அதன் ஆழத்தையும் உணர்ந்தேன். என்னை தொடர்ந்து என் அம்மாவும் தொலைபேசியில் பேசினார்கள். இதுவரை இப்படி ஒரு புத்தகம் வெளிவந்ததில்லை என்று என் அம்மா குறிப்பிட்டார்கள்.

இந்த புத்தகம் என்கையில் கிடைக்கப்பெற்றதால் நான் பெற்ற பாக்கியத்தையும் மேலும் இதன் உள் புதைந்திருக்கும் மகிமையையும் மகத்துவத்தையும் உணர்ந்தவனாய் , 5000 (ஐந்து ஆயிரம்) பிரதிகள் அச்சடித்து வெளியிட்டுள்ளேன். மேலும் பல ஆயிரம் புத்தகம் அச்சிட ஆவல் கொண்டுள்ளேன். அதை எல்லாம் வல்ல இறைவனே செய்து முடிப்பார் என்ற பூரண நம்பிக்கையில் முன்னோக்கி நடைபோடுகிறேன்.

இந்த புத்தகத்தை ஜாதி, மத, இன, மொழி, பாகுபாடின்றி யாவரும் படித்து உணர்ந்து, அதனால் இவ்வுலகம் ஓடும் ஓட்டத்தின் திசைக்கு தப்பி எதிர்மறையாய் தேவ இரக்கத்திலும், நீதியிலும் உந்தப்பட்டவர்களாய் அவரையே நோக்கி ஓடுவோம், ஓடுவோம் அதன் பலனை சூடுவோம்.

இப்படிக்கு
A. ஜெபமணி எபநேசர்

வெளியிடுபவர்
A.J. எபநேசர்
79, 2வது கைலாச தெரு
நாசரேத். தூத்துக்குடிமாவட்டம்
செல் : 9787770250

முதற்பதிப்பு : 5000 பிரதிகள்
: 2014 பிப்ரவரி

அவரே இவர்! இதுவே தேவனுடைய சட்டப்புத்தகம்!!

அன்பானவர்களே!

இந்த புத்தகத்தை படித்து கொண்டிருக்கிற, தொலைகாட்சியை, இணைய தளத்தை, பார்த்து கொண்டிருக்கிற, கேட்டு கொண்டிருக்கிற உங்களை அண்ட சராசரங்களையும் படைத்த தேவன் பார்க்கிறார். உலக மக்களாகிய நாம், பரிசுத்த தேவனின் இரக்கத்தையும், நீதியையும், தியானிக்கும் போது, கிருபையும் வல்லமையும், உன்னதத்தில் இருந்து இறங்கி வருவதை உணர்வீர்கள். பரிசுத்த இரத்தத்தால் சார மேற்றபட்ட வார்த்தையின் மகிமையின் ஒளி, கேட்கிறவர் காதுகளில் ஊடுருவி சென்று இருதயத்திலே, பெரிய தாக்கத்தையும், தாகத்தையும் உண்டு பண்ணுவதாக. **ஒரு பேரொளி** இன்று உங்களை சந்திப்பதை உணர்வீர்கள்.

நீதியும், இரக்கமும் இன்று உலகத்தில் கரைந்து, மறைந்து போய்விட்டது. படைத்த இறைவனுடைய, நீதியையும் இரக்கத்தையும் மனுக்குலம், உணராததால், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, விவாகரத்து, ஆகியவை அன்றாட நிகழ்வாகிவிட்டது. இதை தான் நாம் தினசரி பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும், பார்க்கிறோம். இவைகளில் இருந்து மீள ஒரே வழி **தேவனுடைய சட்டத்தை அறிந்து கொள்வதே, புரிந்து கொள்வதே.**

வானத்தையும் பூமியையும், சமுத்திரத்தையும், சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும், படைத்து அதை, அதன் சுற்று வட்டத்தில், ஓடவிட்ட தேவனை உணர்ந்தவனாய் உங்கள்முன் நிற்கிறேன்.

என்கையில் இருக்கிற புத்தகம் ஒரு பிரிவினருடைய புத்தகம் அல்ல, அண்ட சராசரங்களையும் படைத்த தேவனுடைய சட்ட புத்தகம், அவருடைய இருதய துடிப்பை வெளிப்படுத்துகிற புத்தகம். இருதயம் துடிக்க வேண்டும் என்றால் ஒரு இரத்தநாளம் தொடர்ந்து ஓட வேண்டும். இதை நாம் இந்த புத்தகத்தில் முதல் ஆகமத்தில் இருந்து கடைசி ஆகமம் வரை கோர்த்து ஒரு இரத்த நாளம் தொடர்ந்து ஓடி கொண்டிருப்பதை படித்தால் உணரலாம்.

இதுவே தேவனுடைய சட்டப்புத்தகம் என்பதை விளக்குகிறேன்.

(I) **ஒரு நாட்டுக்கு இரண்டு சட்டப்புத்தகம் இருந்தால் என்ன ஆகும்?**
நீதி துறை செயல் படமுடியாது, காவல்துறையும் ராணுவமும் செயல்பட முடியாது, இதை உலக மக்கள் அத்தனைபேரும் ஒத்துக்கொள்வீர்கள்.

(ii) அதுபோல ஒரு அரசனுக்கு இரண்டு சட்டபுத்தகம் இருந்தால் என்ன ஆகும்? நீதிதுறை செயல்படமுடியாது, காவல்துறையும் ராணுவமும் செயல்படமுடியாது.

(iii) அநீதியான உலகத்திற்கே இரண்டு சட்டபுத்தகம் இருக்க முடியாதெ ன்றால்**, அண்ட சராசரங்களையும் படைத்த இறைவனுக்கு இரண்டு சட்டபுத்தகம் இருக்க முடியுமோ?** உலகத்து மக்களே! சிந்தியுங்கள்; சிந்தியுங்கள்.

நம்மை படைத்த இறைவனுடைய மகத்துவங்களை ஆழமாய் அறிந்துகொள்ள இணைய தளத்தில் **"GOOGLE SEARCH"**–ல் சென்று "**MILKYWAY GALAXY**", என்று டைப் பண்ணினால், தேவனின் படைப்பின் அதிசயங்களை பாருங்கள். தேவனுடைய மகத்துவங்களை. அறிந்துகொள்ளுங்கள், உணர்ந்து கொள்ளுங்கள்.

தேவனுடைய சட்டப்புத்தகத்தின் தனித் தன்மையை பார்ப்போம் **வெளியில் இருந்து பார்த்தோமென்றால்,**

(I) இந்த சட்டப்புத்தகம் மனித ஆவியால் எழுதபட்டதல்ல.

(ii) உலகில் அதிக அளவு தொல் பொருள் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப் பட்டு நிருபணமான புத்தகம் இதுவே.

(iii) உலகில் முதல் முதல் அச்சு இயந்திரத்தில் அச்சிடப்பட்ட புத்தகம் இதுவே.

(iv) உலகில் அதிக மொழிகளில் மொழிபெயர்க்கபட்ட புத்தகமும் இதுவே.

(V) எல்லாவற்றிற்கும் மேலாக **தேவனுடைய சிங்காசனத்தின் அஸ்திவாரத்தை** வெளிப்படுத்தும் ஒரே புத்தகம் இதுவே.

இப்போது இந்த புத்தகத்தினுள் பார்த்தோமென்றால்

1) இந்த சட்டப்புத்தகத்தின் முதல் ஆகமம் மனிதனின் படைப்பையும், கடைசி ஆகமம் உலகத்தின் முடிவையும், மனு குலத்தின் முடிவையும், வெளிப்படுத்துகிறது.

2) ஒளியையும், இருளையும் கோடிட்டு காட்டும் புத்தகம் இது!.

3) முழு உலகமும் பாலியல் பாவத்தில் நிறைந்த போது முழு உலகத்தையும் தண்ணீரால் அழித்த விதம்;

4) நகரங்கள் **"HOMO SEX"** ஆல் நிறைந்தபோது தேவ கோபம் வானத்தில் இருந்து இறங்கி நகரங்களை எரித்த விதம்;

5) மொழிகள் உருவான விதம்; (ஆதியாகமம் 11:7)

6) தற்கால கண்டுபிடிப்புகளான
a) காற்றுக்கு எடை உண்டு (யோபு 28:25)
b) பூமி உருண்டை (ஏசாயா 40:22)
c) பூமி தொங்குகிறது (யோபு 26:7)

7) மைக்ரோ சிப்–யை மனித உடலில் பதிக்கும் இடத்தையும், அதுமட்டுமல்ல, இணையதளம், "www." - ன் எதிர்காலமும் வரையறுக்கப்பட்டுள்ளது.

இது போன்ற இன்னும் பல காரியங்களை தேவன் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எழுதிகொடுத்துள்ளார், என்பதை அறிய முடியும். **படைத்த இறைவனுடைய அனந்த ஞானத்தின் உச்சமே சிருஷ்டிகளை ஆண், பெண் என வனைந்தது.**

முதல் அத்தியாயமான படைப்பின் அத்தியாயம் 2:24–ல், இந்த சட்ட புத்தகம் கூறுகிறது **"புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான் அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்".** இந்த பிரமாணத்தின்படி **கணவனும், மனைவியும்** நேசத்தில் பிணைக்கப்பட்டு வாழ்ந்தால் அவர்கள் சந்ததியும் இந்த ஆசீர்வாதத்திற்கு நேராக கடந்து போவதை நாம் பார்க்கலாம்.

இந்த தேவ நீதி உலகம் முழுவதும் ஜாதி, மத, மொழி, இன, பேதமின்றி எல்லா சமுதாயத்தினர் இடையேயும் வியாபித்திருப்பதை ஆராய்ந்தால் உணரலாம்.

மேலும் குடும்ப வாழ்க்கையின் ஒழுங்கை நிர்ணயித்து, **"யாரை நிர்வாணமாக்கலாம் யாரை நிர்வாணமாக்கக்கூடாது"**, என்ற நெறிமுறைகளை கட்டளைகளாக பிரகடனப்படுத்தி உள்ள ஒரே புத்தகம். அதாவது மனித வாழ்க்கையை பரிசுத்தப்படுத்தும் ஒரு **BEST MARRIAGE MANUAL** ஆகவும், தேவ சட்ட புத்தகம் உள்ளது.

மேலும் இதை அறிய கீழே உள்ள இணைய தளத்தை பாருங்கள்.

www.creatorslegalmanual.com (or) .co.in

இணையதளத்தில் பக்கம் (4/4) கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கை,(LIFE)

மனிதனை ஆணும் பெண்ணுமாக படைத்தவர் அவர்களை வடிவமைத்த விதம் ஆச்சரியமானது. சகலத்தையும் மனிதன் ஆண்டு அனுபவிக்க அதிகாரத்தை கொடுத்ததுமல்லாமல், இந்த பூமியை நிரப்பும்படியாய் அவர் முன்குறித்த உடன்படிக்கை மூலமாக தேவனால் பூட்டபட்ட திருமண உறவை (WED LOCK) ஏற்படுத்தி உள்ளார். இதன் மூலம் கனி நிறைந்த மகிழ்ச்சியான வாழ்க்கையை, தொடர்ச்சியாய் சந்ததி சந்ததியாய் கொடுத்ததும் அல்லாமல், மனுக்குலம் வாழ்ந்து பெருகி அவரில் நிலைகொள்ள, அவர் பூமியை நிலைநிறுத்தி இருக்கிறார்.

தேவனால் பூட்டபட்ட திருமண உறவு (WED LOCK)

1) **சிருஷ்டிகர் ஒப்புதல்** உடன், (2) **நாட்டின் சட்டத்திற்கும், ஒழுங்கிற்கும் உட்பட்டு**, (3) **பெற்றோர் அனுமதியுடன்** (4) **உடலும் உள்ளமும்** சேர்ந்த மிகவும் இறுகிய ஆழமான உறவிற்கு, (5) **ஆணும் பெண்ணுமாக** (6) **ஒன்றாக இணைய**, (7) அதன் மூலம் **ஆரோக்கியமான வாழ்க்கை**யும், (8) **அவர் முத்தரித்த உயிர் அணுக்கள்** இணைந்து அவர் சந்நதியில் பெற்றோர் பண்ணின உடன் படிக்கையின்படி, (9) **பரிசுத்த சந்ததி** உருவாகிறது.

விளக்கம்

அடைப்பு குறியில் கொடுக்கப்பட்டுள்ள (1) முதல் (9) வரை உள்ள வார்த்தையின் விளக்கத்தை அவருடைய சட்டபுத்தகத்தில் பார்ப்போம்.

(1) ஸ்ருஷ்டிகர் ஒப்புதல்

நீதிமொழிகள் 19:14 – வீடும் ஆஸ்தியும் பிதாக்கள் வைக்கும் சுதந்தரம், புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு.

(2) நாட்டின் சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் உட்பட்டு

நீதி மொழிகள் 8 : 15 – என்னாலே ராஜாக்கள் அரசாளுகிறார்கள், பிரபுக்கள் நீதி செலுத்துகிறார்கள்.

(3) பெற்றோர் அனுமதியுடன்

உபாகமம் 5:16 – உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கும், நீ நன்றாயிருப்பதற்கும், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டபடியே, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.

(4) உடலும் உள்ளமும்

எபேசியர் 5:31 – இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்.

(5) ஆணும் பெண்ணுமாக

லேவியராகமம் 18:22– பெண்ணோடு சம்யோகம் பண்ணுகிறதுபோல ஆணோடே சம்யோகம் பண்ணவேண்டாம்; அது அருவருப்பானது.

(6) ஒன்றாக இணைய

1 கொரிந்தியர் 7:4 – மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷனும் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, மனைவியே அதற்கு அதிகாரி.

(7) ஆரோக்கியமான வாழ்க்கை

பிரசங்கி 9:9 – சூரியனுக்குக்கீழே தேவன் உனக்கு நியமித்திருக்கிற மாயையான நாட்களிலெல்லாம் நீ நேசிக்கிற மனைவியோடே நிலையில்லாத இந்த ஜீவவாழ்வை அனுபவி; இந்த ஜீவனுக்குரிய வாழ்விலும், நீ சூரியனுக்குக்கீழே படுகிற பிரயாசத்திலும் பங்கு இதுவே.

நீதிமொழிகள் 5:18 – உன் ஊற்றுக்கண் ஆசீர் வதிக்கப்படுவதாக; உன் இளவயதின் மனைவியோடே மகிழ்ந்திரு.

நீதி மொழிகள் 5:19 – அவளே நேசிக்கபடதக்க பெண்மானும், அழகான வரையாடும்போலிருப்பாளாக; அவளுடைய ஸ்தனங்களே எப்பொழுதும் உன்னைத் திருப்திசெய்வதாக; அவளுடைய நேசத்தில் நீ எப்பொழுதும் மயங்கியிருப்பாயாக.

நீதிமொழி 4:22 – அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்.

(8) அவர் முத்தரித்த உயிரணுக்கள்

சங்கிதம் 139:16 – என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புத்தகத்தில் எழுதியிருந்தது.

(9) பரிசுத்த சந்ததி

எபிரேயர் 13:4 – விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம், அசுசிப் படாததாயுயிருப்பதாக;---

மல்கியா 2:15 – அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே, பின்னை ஏன் ஒருவனைப்படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதானே. ஆகையால் ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்குத் துரோகம் பண்ணாதபடிக்கு, உங்கள் ஆவியைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

வெற்றிகரமான வாழ்கைக்கு திறவுகோல்

எபேசியர் 5:22 – **"மனைவிகளே, கர்த்தருக் கீழ்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்படியுங்கள்."**

எபேசியர் 5:25 – **"புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்;---"**

இப்போது இந்த சட்டப் புத்தகத்தின் ஊடே கடந்து போவோம்.

1. அவரே இவர்

ஒரு நூலை நூலாசிரியர் எழுதுவாரென்றால் அதற்கு ஒரு முகவுரை இருக்கும் ஒரு முடிவுரை இருக்கும், முகவுரையில் அவர் யாரென்றும் என்ன பண்ணிக் கொண்டிருக்கிறார் என்றும் சொல்லுவார், முடிவுரையிலே அந்த புத்தகத்தினுடைய சாரம் இருக்கும். இப்போது படைப்பின் அத்தியாயம் 1:1யை பார்ப்போம்.

"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்"

முதல் ஆகமத்தில் முதல் இரண்டு அதிகாரங்களும் சிருஷ்டிப்பை சொல்லுகிறது, பூமி வெறுமையும் இருள் சூழந்ததுமாய் இருந்தது. தேவன் வெளிச்சத்திற்கு கட்டளையிட்டார், வெளிச்சம் உண்டாயிற்று. வெளிச்சத்தையும் இருளையும் பிரித்தார், பகலும், இரவும், தோன்றிற்று. இவ்வாறாக சிருஷ்டிப்பு தொடர்கிறது. இப்போது இந்த சிருஷ்டிப்பின் தேவனை அறிய கடைசி அதிகாரம் கடைசி வார்த்தை,

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக ஆமேன்".

ஆதியில் இருந்த சிருஷ்டிப்பின் தேவன் இங்கு கிறிஸ்துவாய் வெளிப்படுகிறார். மேலும் இவரை அறிய கடைசி அதிகாரம் 22:13 யை தியானித்தால்.

"நான் அல்பாவும் ஒமேகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்."
(யோவான் 8:24,எசாயா 44:6, 48:12, 41:4, வெளி 1:8,11)

முந்தினவரான சிருஷ்டிப்பின் தேவன் பிந்தின கிறிஸ்துவாய் வெளிப்படுகிறார். இவரை மேலும் அறிய I. தீமோத்தேயு 3:16யை பார்ப்போம்.

" .... தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார் ...."

இந்த தேவனை மேலும் அறிய கடைசி அதிகாரம் வெளி. 19:13 , **"இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தைத் தரித்திருந்தார், அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே."**

இவ்வாறாக இந்த சட்டப்புத்தகத்தின் வார்த்தையானது, பரிசுத்த இரத்தத்தால் சாரமேற்றப்பட்டது.

மேலும் **அவரே இவர்** என்பதை உணரும் படியாய் சில ஆதாரங்களை, உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன்.

1. பிந்தின கிறிஸ்துவாய் வெளிப்பட்டவர் தனித் தன்மையோடு வெளிப்பட்டார்.

2. சட்டப்புத்தகம் சொல்வது போல, **குரானிலும் அத்தியாயம்19,** மரியம் பகுதியில் வசனம் 21–ல் தேவ உத்தரவுபடி கன்னியினிடத்தில் உற்பவித்தார், என்று எழுதப்பட்டுள்ளது.

3. இதன் மேன்மையை தனி தன்மையை விளக்குகிறேன். மனிதனின் சராசரி வயது 60 என்றும், ஒரு தலைமுறைக்கு 700 கோடி மக்கள் என்றால் இந்த 2012 ஆண்டுகளில் 33 தலைமுறையில் சுமார் 23,100 கோடி மக்கள் பிறந்துள்ளார்கள். இவர்கள் அத்தனை பேரும் தாய் – தகப்பன் உறவில் பிறந்தவர்கள். அதாவது அனைவரும் ஒரே ஜீனியாளஜி–ல் பிறந்தவர்கள்.

   இவரோ **கன்னியின் வயிற்றில் கருவாக** மற்றொரு ஜீனியாளஜி–ல், தேவ கட்டளைபடி அவதரித்தவர். எனவே அவருடைய இரத்தம் தனி பிரிவு அதாவது அவருடைய இரத்த பிரிவு **"பரிசுத்தம்"**, எனவே இவரை மற்ற மனிதர்களோடு ஒப்பிடுவது சரியா ? சிந்தியுங்கள்!

4. இவர் பிறந்த போது சரித்திரம் இரண்டாகப் பிளந்தது.

5. மேலும் **நாட்காட்டியில்** ஒரு தேதியை எடுத்து கொள்வோமென்றால் கிறிஸ்து என்பவர் அவதரித்து இத்தனை ஆண்டுகள், இத்தனை மாதம், நாட்கள் என்பதை உலக மக்களுக்கு உணர்த்துகிறது. இந்த உண்மையை உலகமக்கள் அனைவருக்கும் ஒவ்வொரு நாள் காலையிலும் நாட்காட்டி உலகத்து மக்கள் அறியாதிருந்தும் அவர்களுக்கு அறிவித்து கொண்டே இருக்கிறது. **மக்கள் உணர்ந்தாலும் உணராவிட்டாலும் நாட்காட்டி அறிவித்து கொண்டே இருக்கிறது. இது நிலைநிறுத்தப்பட்ட ஒரு சாட்சி.**

6. இன்னும் பார்ப்போம் என்றால் அவர்பிறப்பை ஆதாரமாக கொண்ட தேதியில் தான் மின் கணினி, இணையதளம், சாட்டிலைட், ராக்கெட் எல்லாம் இயக்கிவிக்கப்படுகிறது. ஏன் உலகில் அவதரித்த மா-மனிதர்கள் உலகத்தை ஆண்ட மா-மன்னர்களுக்கு இந்த மகிமை - இல்லையே, இதையும் சிந்தியுங்கள்! சிந்தியுங்கள்!

7 மேலும் உலகத்தில் எந்த பகுதியில் இருந்தும் இந்த பரிசுத்த பெயரை இருதயத்தில் ஆழமாய் விசுவாசித்து நம்புகிறவர்களுக்கு இருள் அவரே இவர் என்று அறிந்தபடியால் அவர்களின் இருள் அலறி அகலுகிறது. அதுபோல இருதயத்தில் விசுவாசித்து நம்புகிறபோது, நோய்கள் மறைகிறது. உடலில் உள் உறுப்புகள் உருவாகிறது, குருடர்கள் பார்வை அடைகிறார்கள், செவிடர்கள் கேட்கிறார்கள், முடவாகள் நடக்கிறார்கள். இது ஏன் என்று சிந்தியுங்கள் **அவரே இவர் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.**

2. சட்டபுத்தகம் யாருக்கு கொடுக்கப்பட்டது?

மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்து இருக்கிறார்.

**கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும்
கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச்
செய்தார்,அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே.**

அப்போஸ்.17:26, 27

இவ்வாறாக மனுஷஜாதியான சகல ஜனங்களையும் ஜாதி, மத, மொழி, இன, பேதமின்றி **ஒரே இரத்தத்தினாலே** தோன்றப்பண்ணி ,பூமியின் மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் முன் குறித்து இருக்கிறார். அவர் ஒருவருக்கும் தூரமானவரல்ல, ஆனால் நீதியிலும், இரக்கத்திலும் நடக்கும் மக்களுக்கு அவர் சமிபித்திருக்கிறார். மேலும் இருள் பூமியை மூடுவதால் முழுமனுக்குலமும் அவரை **தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத்** அதற்கு அவர் வகுத்த வழியை இந்த சட்டப்புத்தகம் உலகத்திற்கு உணர்த்துகிறது .

3. இந்த சட்டப்புத்தகம் யாருக்குப் புரியும்?

ஒரு நாஸ்திகன், முதல் அட்டையில் இருந்து கடைசி அட்டைவரை இந்த புத்தகத்தை படிப்பானேயாகில் தேவனுடைய மகிமையையும் அவருடைய பராக்கிரமத்தையும், **அவர் செங்கடலை பிளந்தார்** என்பதையும் நம்ப முடியாததால், உடனே இதை எரிக்க வேண்டுமென்று சொல்லுவான், இதைத்தான் இரண்டாவது உலகமகாயுத்தத்தை நடத்திய ஹிட்லர் பண்ணினார். அப்படியே ஜெர்மனியை சேர்ந்த வால்டர் என்பவரும் செய்தார். வால்டர் சொன்னார் தன்னுடைய ஆயுள் நாட்களிலே இந்த புத்தகத்தை இல்லாமல் ஆக்கிவிடுவேன் என்று. ஆனால் என்ன நடந்தது? அவருடைய ஆயிசுநாட்களுக்கு பின்பு அவருடைய வீடே, தேவ சட்டப் புத்தகத்தை அச்சடிக்கும் அச்சு கூடமாக மாறியது.

இதே நேரத்திலே ஒரு நீதிமான், நான் நீதிமான் என்று பார்ப்பது வாழ்க்கையில் நீதியாய் நடந்து தேவனுக்கு பிரியமாய் வாழ்கிற ஒரு மனிதன் இந்த சட்டப்புத்தகத்தை சந்திப்பானானால், அவன் அதைத் தன் தோளிலே சுமப்பான் தன் இருதயத்திலே சுமப்பான், தன் தலையிலே அதாவது தன் சிந்தனையில் சுமப்பான். உலகின் 700 கோடி மக்களும் இந்த புத்தகத்தை படிப்பார்கள் என்றால் 700 கோடி விதமாய் புரியும், இதை உணரும் படியாய் நீதிமொழிகள் 2:7ல் என்ன சொல்லுகிறது என்று பார்ப்போம்.

நீதி – 2:7, "அவர் நீதிமான்களுக்கென்று மெய்ஞ்ஞானத்தை வைத்துவைத்திருக்கிறார்..................".

இதுதான் இந்த தேவசட்டப்புத்தகத்தின் **திறவுகோல்,** அவர் நீதிமான்களுக்கென்று மெய் ஞானத்தை வைத்து வைத்திருக்கிறார். **இந்த மெய் ஞானம் என்பது தேவனுடைய மகத்துவங்களை அறிந்து கொள்வது.** அவர் எப்படிப்பட்டவர் என்றும், அவரால் எதைச் செய்யக்கூடும், எதை செய்யக்கூடாது, அவர் எதை நேசிக்கிறார் எதை வெறுக்கிறார் என்ற மகத்துவங்களை அறிந்து கொள்வதே மெய்ஞானம்.

இந்த மெய்ஞானம் எல்லாருக்கும் கொடுக்கப்படவில்லை. ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கையில் தேவ நீதியையும், இரக்கத்தையும் எந்த அளவு உணர்ந்து கொள்கிறானோ, அந்த அளவுக்கு இந்த தேவசட்டம் புரியும்.

அதாவது நீதியையும், இரக்கத்தையும் உடைய லென்ஸ் – யை பதித்த கண்ணாடியின் ஊடே பார்த்தால் அதன் ஆழம் தெரியும் புரியும்!

இப்போது இந்த சட்டப்புத்தகத்தின் தேவநீதி சகல ஜீவ ஜந்துக்களுக்கும் புரிகிறது. அதனால் தான் சங்கீதத்தை எழுதிய தாவீது ராஜா சங்கீதத்தை முடிக்கும் போது இவ்வாறாக முடிக்கிறார்.

சங்கீதம்– 150:6, " சுவாசமுள்ள யாவும் கர்த்தரை துதிப்பதாக.........",

மேலும் யோபு கூறுகிறார்

யோபு 12:7, இப்போது நீ மிருகங்களைக் கேட்டுப்பார், அவைகள் உனக்குப் போதிக்கும் ஆகாயத்துப் பறவைகளை கேள், அவைகள் உனக்கு அறிவிக்கும்.

யோபு 12:8 அல்லது பூமியை விசாரித்து கேள், அது உனக்கு உபதேசிக்கும், சமுத்திரத்தின் மச்சங்களைக் கேள், அவைகள் உனக்கு விவரிக்கும்.

இப்போது சுவாசமுள்ள ஜீவஜந்துக்களை பார்ப்போம். காட்டில் வாழும் மிருகங்கள், பறக்கும் பறவைகள், ஊரும் பிராணிகள், நீர்வாழ் ஜந்துக்கள், இவைகள் யாவும், அதிகாலையில், வானம் வெளிவிட ஆரம்பிக்கும் போது,

1) **சிங்கம்** கெபியில் இருந்து வெளியே வந்து மேல் நோக்கி பார்த்து கெர்ஜிக்கிறது.

2) **குயில்** கூவுகிறது. காக்கை கூட்டம் ஆர்பரித்து குலாவித்து மகிழ்கிறது.

3) **முயல்,** வளையில் இருந்து வெளியில் வந்து மேல் நோக்குகிறது.

4) **மீன்,** நீர் மட்டத்திற்கு மேல் பாய்ந்து வானத்தை பார்த்து குதித்து தண்ணீருக்குள் மீண்டும் செல்கிறது.

இவைகள் ஏன் இப்படி செய்கிறது என்றால் இந்த ஜீவ ஜந்துக்களுக்கு ஒன்று தெரியும், தன்னை படைத்த சிருஷ்டிகரை அவைகளுக்குத் தெரியும்,

சங்கீதம்–145:15, "எல்லா ஜீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக்கொண்டிருக்கிறது; ஏற்ற வேளையிலே நீர் அவைகளுக்கு ஆகாரங் கொடுக்கிறீர்.

சங்கீதம்–145:16, " நீர் உமது கையைத் திறந்து, சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர்."

அதனால் இந்த ஜீவ ஜந்துக்களுக்கு என்ன நடக்கிறது என்றால், **தங்கள் வாழ்நாளில் ஒரு நாளும் ஒரு மருத்துவரிடமும் செல்ல தேவன் அனுமதித்ததில்லை. மேலும் வாழ்நாளில் ஈனும் காலத்தில் கூட மருத்துவரிடமும் செல்ல அவர் அனுமதித்ததில்லை.**

ஆனால் ஆறறிவுள்ள மனிதன் தனக்கு நோய் வந்த உடன் முதலில், நாடுவது மருத்துவரைத் தான். அவன் வாழ்வில் படைத்த இறைவன் 2–வது நிலைக்குத் தான் தள்ளப்படுகிறார். ஆனாலும் தேவன் இரக்கம் நிறைந்தவராய் தான் படைத்த மனிதருக்கு மருத்துவர்மூலமாய் உதவி செய்கிறார். இதை நான் விளக்குகிறேன். மரணத்தருவாயில் இருக்கும் ஒரு ஆஸ்துமா நோயாளியை எடுத்துக் கொள்வோம் அவருக்கு ஒரு ஸ்டிராயிட் ஊசி போட்டால் அவர் குணம் அடைகிறார். அதே நேரத்தில் அதே நோய் உடைய இன்னொரு ஆஸ்துமா நோயளிக்கு இந்த ஊசியை போடுவார்கள் என்றால் அவர் தவறிவிடுகிறார். அதே மாதிரி ஒரு நோய்க்கு கொடுக்கும் மாத்திரை அதே நோயுள்ள இன்னொரு நோயாளிக்கு ஒத்துக்கொள்ளாமல் உடனே பக்க விளைவுகளை ஏற்படுத்துகிறதையும் பார்க்கிறோம்.

இதில் இருந்து ஒன்று தெரிகிறது, தேவன் மனம் வைத்தால் மட்டுமே எந்த மாத்திரையும் மருந்தும் வேலை செய்யும். இதை நான் என் வாழ்க்கையிலும் அனுபவித்தவனாய், **உணர்ந்தவனாய் பேசுகிறேன், எழுதுகிறேன்.**

அது மட்டுமல்ல ஒரு மனிதனுடைய உடலில் எத்தனை, உயிர் அணுக்கள் இருக்கிறது, என்பதை எந்தத் துறை நிபுணரும் அறியார்கள், தேவனே அதை அறிவார். **உயிரோட்டமுள்ள அத்தனை உயிர் அணுக்களும் தேவனுடைய கட்டளைக்கு காத்திருக்கின்றன,** அவர் உத்தரவுப்படி செயல் படுகின்றன. எனவே தான் சுகமாய் படுக்கைக்கு செல்லும் ஒரு மனிதன் மறுநாள் காலையிலோ வேதனையோடு எழும்புகிறான்.

அதே நேரத்தில் மருத்துவரால் நாள் குறிக்கப்பட்ட நோயாளிகூட, பல வருடம் தன் உடலின் உறுப்புகள் இல்லாத நிலையிலும் அல்லது உறுப்புகள் செயல் இழந்த நிலையிலும், உயிரோடு வாழ்கிறார். இவ்வாறான மருத்துவ அதிசயங்கள் ஒவ்வொரு நாளும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கு மருத்துவத்தாலோ, விஞ்ஞானத்தாலோ எந்த விளக்கமும் கொடுக்கமுடியவில்லை.

4. தேவ இரக்கமும், இரக்கத்தின் ஆழமும்

யோபு –34:19, "**.........................பிரபுக்களின் முகத்தைப் பாராமலும், ஏழையைப்பார்க்கிலும், ஐசுவரியவானை அதிகமாய் எண்ணாமலும் இருக்கிறவர்...**" (Yet **He** is not partial to princes, Nor does **He** regard the rich more than the poor.)

இவ்வளவாய் ஏழை மேல் நினைவு வைத்த **தேவனின் ஐசுவரியத்தை பாருங்கள்.** அவர் வைரத்தையும், வைடூரியத்தையும்,கல்லிலே உறையவைத்தவர். தங்கத்தையும், அனைத்து உலோகங்களையும் மண்ணிலே கரைத்தவர், விலையுயர்ந்த படிக துணுக்குகளை மணலிலே கலந்தவர். அதுமட்டுமல்ல 50,000 கோடி கேலக்சிக்கு **(GALAXY)** சொந்தக்காரர், **மேலும் வைரத்தினால் ஆன வைரகோளுக்கு சொந்தக்காரர்.** இப்படிபட்ட பிரமிக்கவைக்கும், சிருஷ்டிகரின் இருதயத்தை பார்ப்போம்.

ஒரு ஏழை, தெருவில் உள்ள ஒரு ஏழை, தூங்க போகும் போது சொல்கிறார் தேவனே இன்று உள்ள பங்கை கொடுத்தீர் நாளைக்கு உள்ள பங்கை தாரும், இதே நேரத்தில் உலகத்தில் முன் அணியிலுள்ள ஒரு ஐசுவரியவானை எடுத்து கொள்வோம், அவர் தூங்க போகும்போது சொல்கிறார், தேவனே 10,000 கோடி ரூபாய் இந்த வாரம் வரவேண்டும், அது வந்துவிட்டால் உமக்கு 1000 கோடி கொடுக்கிறேன். இதை தான் மொத்த உலகமும், உலகத்தில் உள்ள எல்லா மக்களும், அத்தனை மதங்களும் செய்து கொண்டிருக்கின்றன. தேவன் கொடுத்தால் **மேலும்** கொடுப்பார் என்று, ஆனால் அவரோ மனதுருக்கத்தில் நிறைந்தவராய் இருக்கிறார். இப்போது இந்த ஏழையையும், ஐசுவரியவானையும் சந்திக்க தேவன் கடந்து வருகிறார். லூக்கா 16:19–23–ன் படி, முதலில் இந்த ஏழையை தான் சந்திப்பார், இந்த ஐசுவரியவானை சந்திக்கலாம், சந்திக்காமலும் இருக்கலாம், ஏன் என்றால் அவர் தேவனுக்கு நிபந்தனை வைத்தார்.

அதே நேரத்தில் **நாட்டின் பிரதமரை சந்திக்க** இந்த ஏழையும், ஐசுவரியவானும் செல்வார்கள் என்றால் அந்த ஐசவரியவானை மிகுந்த கனத்தோடு அழைத்து செல்வார்கள். அதே நேரத்தில் இந்த ஏழையை காவல்துறை கண்ணால் பார்க்கக் கூடிய தூரத்தை நெருங்கவே அனுமதிக்காது.

இதனால் தான் ஏசாயா 55:9ல் **"பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என்நினைவுகளும் உயர்ந்திருக்கிறது",** என்று தேவன் உரைக்கிறார்.

தேவன் தன்னை பற்றி கூறுவதை கவனியுங்கள் அவரை அறிந்து கொள்ளுங்கள், புரிந்து கொள்ளுங்கள்.

சங்கீதம்–22:24–யை பார்ப்போம், **"உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமலும் அருவருக்காமலும், தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து, தம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார்".**

இதை நான் விளக்குகிறேன்.

ஒரு மனிதன் நோய்வாய்ப்படுகிறான், அவனுடைய வயிற்றிலுள்ள நோயின்நிமித்தம் துர்நாற்றம் ஏற்படுகிறது, அவனுடைய மனைவி அருகில் சென்று சாப்பாடு கொடுக்கிறார்கள், இந்த துர்நாற்றத்தின் நிமித்தம் அற்பமாக என்னுகிறார்கள்.

இன்னும் அவருடைய நிலை மோசமாகி துர்நாற்றம் அதிகரித்து, உருக்குலைந்து விட்டார் என்றால் மேலும் அவரை அருவெருக்க ஆரம்பிக்கிறார்கள். மேலும் நாட்கள் செல்லச் செல்ல துர்நாற்றத்தின் நிமித்தம் அவர்கள் கதவை திறந்து ஆகாரத்தை வைத்துவிட்டு நீங்கள் அதை எடுத்து புசியுங்கள் என்று சொல்கிறார்கள், அதாவது அவர்களுடைய முகத்தை மறைக்கிறார்கள். ஆனால் இந்த நிலையிலே அந்த மனிதன் தேவனை நோக்கி நான் பாவி என்னை மன்னியும் என்று கதறுவானேயாகில், அவரோ இறங்கி வருவார், அவனை அற்பமாய் எண்ணாமலும், அருவருக்காமலும் தன்னுடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலும் இருந்து, அவனுக்கு உடனே விடுதலையை கொடுக்க அவரால் முடியும், இல்லையேல் அவனை மகிமையில் எடுத்துக்கொள்வார். இந்த இரண்டில் எதையும் செய்ய அவரால் உடனே கூடும், அவனுடைய வேதனைக்கு ஒருமுடிவை கொண்டு வருவார்.

இப்போது யாக்கோபு–2:13, யை பார்ப்போம்

"........இரக்கம் செய்யாதவனுக்கு, இரக்கமில்லாத நியாய தீர்ப்புக்கிடைக்கும், நியாயத் தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டும்."

இதை நான் விளக்குகிறேன். ஒரு திருடன் திருட சென்றான். அவன் தெருவில் உள்ள பெரிய வீடு எது என்று பார்த்து திருடுகிறான். அவன் திருடினது ஒரு நீதிபதியினுடைய வீடு, காவல்துறை முடுக்கிவிடப்பட்டு திருடன் ஒரு வாரத்திலே நீதிமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டான். நீதிபதி அவனைப் பார்த்த உடன் நினைக்கிறார், அவனுக்கு கடினமான தண்டனை கொடுக்கவேண்டும் என்று, அவனை பார்த்து கேட்கிறார்: " நீ ஏன் திருடினாய் ? எதற்கு திருடினாய்". அப்பொழுது அவன் சொல்கிறான், "ஐயா நான் ஏழை, என் பக்கத்து வீட்டுக்காரர் படும் வேதனையை என்னால் தாங்க முடியவில்லை. அவருக்கு உதவவே நான் திருடினேன், திருடினதை நான் வைத்துக்கொள்ளவில்லை, கஷ்டப்படுகிற பக்கத்து வீட்டுக்காரருக்கு கொடுத்து விட்டேன்". இதை கேட்டதும் நீதிபதி சிந்தனையில் தள்ளாடுகிறார், இவன் எடுத்த பொருளை அவன் வைத்துக் கொள்ளவில்லையே, இவனை திருடனில் சேர்க்க முடியாதே! இவனை விட்டு விடலாமா ? அல்லது சிறுதண்டனையை கொடுக்கலாமா ? என்று யோசிக்கிறார். அவர் சிறு தண்டனையை கொடுப்பார், அல்லது விடுவிப்பார். தேவாதி தேவனும் நாம் இரக்கமுள்ளவர்களாய் இருந்தால் தேவனிடத்தில் அன்னாளிலே இரக்கம் பெறுவோம்.

தேவ இரக்கத்தையும், நீதியின் மகத்துவத்தையும் அறிந்துகொள்ள,

நீதி: 14:31– **தரித்திரனை ஒடுக்குகிறவன் அவனை உண்டாக்கினவரை நிந்திக்கிறான். தரித்திரனுக்குத் தயைசெய்கிறவனோ அவரைக் கனம் பண்ணுகிறான்.**

நீதிமொழிகள்– 21:21, மீகா– 6:8, ஓசியா– 12:6, மத்தேயு– 23:23, மத்தேயு– 21:31,32, லூக்கா– 7:29, ரோமர்– 6:18,20. ரோமர்– 10:3, 1யோவான்– 3:7, 2பேதுரு– 2:5, எபிரேயர்– 5:13

5. தேவனுடைய சிங்காசனத்தின் அஸ்திவாரம்

சங்– 89:14 (NKJV)

RIGHTIOUSNESS AND JUSTICE ARE THE FOUNDATION OF YOUR THRONE ...."

" நீதியும், நியாயமும் உம்முடைய சிங்காசனத்தின் (ஆதாரம்)அஸ்திவாரம் ...."

இந்த அஸ்திவாரத்தில் இருக்கிற இவ்வளவு பயங்கரமான தேவனை மேலும் அறிய வேண்டும் என்றால்.

ஏசாயா 28:17, **" நான் நியாத்தை நூலும், நீதியைத் தூக்கு நூலுமாக வைப்பேன்....."**

மேலும் இந்த தேவனை அறிய ஏசாயா–5:16

"சேனைகளின் கர்த்தர் நியாய தீர்ப்பினால் உயர்ந்து, பரிசுத்தமுள்ள தேவன் நீதியினால் பரிசுத்தராய் விளங்குவார்."

நீதியினால் தேவனின் மகிமையை பாருங்கள், **சேரக்கூடாத ஒளியில்** வாசம் பண்ணும், பரிசுத்த தேவனின், பாரபட்சமற்ற தனது நீதியினால், அவரை சுற்றி உள்ள மகிமையின் ஒளி மேலும் ஜொலிக்கிறது.

சங்–68:5, **"தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்திலிருக்கிற தேவன், திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பனும், விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவருமாயிருக்கிறார்."**

அநாதைகளுக்கோ, விதவைகளுக்கோ அநீதி நடக்கும் என்றால் அவர்கள் ஆதரவு அற்றவர்கள் என்று எண்ணி விடாதீர், அண்ட சராசரங்களை நிலை நிறுத்தியவருடைய மகிமையின் புயம் சிங்காசனத்தில் இருந்து இறங்கி வந்து, ஒரு தகப்பனாக அவர்களோடு நின்று அவர்களுக்கு அநீதி விளைவித்தவர்கள் வழியிலே குறுக்கிட்டு ஏற்ற தண்டனையை அவர் தீர்மானித்த காலத்திலே அதற்குரிய இடத்திலே நிறைவேற்றுகிறார்.

அவர் நீதியின் அளவை சங். 48:10–ல் பார்க்கலாம்.

"............... உமது வலதுகரம் நீதியால் நிறைந்திருக்கிறது."

மீகா – 6:8. "............ **நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய், நடப்பதை அல்லாமல், வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்.**

தேவன் சொல்கிறதை பாருங்கள் நியாயத்தை செய்ய சொல்லுகிறார், இரக்கத்தை சிநேகிக்க சொல்கிறார், தேவனுக்கு முன்பாக மனத் தாழ்மையாய் நடந்து அவரே தேவன் என்று அறிந்து உணர்ந்து நடக்க சொல்கிறார்.

நேபுகாத் நேச்சார்

இப்போது உலக அதிசயங்களில் ஒன்றான பாபிலோன் தொங்கு தோட்டத்தை கட்டின, பாபிலோன் சாம்ராஜ்ஜியத்துக்கு பேரரசனான நேபுகாத் நேச்சார் கடவுளை உணர்ந்த பின்பு என்ன சொல்கிறார் என்று பார்ப்போம்.

அவர் அரண்மனையில் உலாவி கொண்டிருக்கும் போது, என் மகிமையின் பிரஸ்தாபத்திற்கு என்று நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று சொன்னார். அந்தச் சணப் பொழுதிலே, **"வானத்தில் இருந்து ஒரு சத்தம் உண்டாகி, ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரே ராஜ்யபாரம் உன்னை விட்டு நீங்கிற்று,"** என்ற சத்தம் ஒலித்தது. அந்தபடியே ராஜ்யபாரம் அவரை விட்டு நீங்கி மாடுகளைபோல் புல்லை மேய்ந்தார், அவருடைய சரீரம் ஆகாயத்து பனியிலே நனைந்தது, அந்த நாட்கள் சென்ற பின்பு தன் கண்களை வானத்துக்கு ஏறெடுக்கிறார். அப்போது இழந்த ராஜமேன்மையை மீண்டும் பெற்று கொண்டார், தேவ உணர்வு அடைந்த பின் கூறுகிறார்.

> தானியேல் 4:37, **"ஆகையால் நேபுகாத்நேச்சாராகிய நான் பரலோகத்தின் ராஜாவை புகழ்ந்து, உயர்த்தி, மகிமை படுத்துகிறேன், அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியமும், அவருடைய வழிகள் நியாயமுமானவைகள்; அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் என்று எழுதினான்".**

மனுக்குலம் தேவநீதியை உணரும் நிலையில் இல்லை

தேவநீதியை ஏன் மனுக்குலம் உணரவில்லை, என்றால் அவர் 99% மேலும் இரக்கமுடையவராய், 1% குறைவாய் நியாயம் விசாரிக்கிறவராய் இருக்கிறபடியால், மனுபுத்திரரின் இருதயம் பொல்லாப்பை செய்ய அவர்களுக்குள்ளே துணிகரங் கொண்டு இருக்கிறது. இதை நாம் பிரசங்கியின் புத்தகத்தில் பார்க்கலாம்.

பிரசங்கி – 8:11,

> **"துர்க்கிரியைக்குத்தக்க தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியால், மனுபுத்திரரின் இருதயம் பொல்லாப்பைச் செய்ய அவர்களுக்குள்ளே துணிகரங்கொண்டிருக்கிறது".**

நீதியையும், நியாயத்தையும் தம்முடைய சிங்காசனத்தின் அஸ்திபாரமாகக் கொண்டிருக்கும் நீதியின் தேவன், மகா இரக்கம் நிறைந்தவர் என்பதாலேயே துன்மார்க்கர்மேல் வரவேண்டிய நியாயத் தீர்ப்பு தள்ளிப் போகிறது.

6. நீதியின் தேவனின் மகிமை

சர்வ சிருஷ்டிக்கும் எஜமானனான தேவன் எப்படிப்பட்டவர் என்று I. தீமோத் 6:16–ல், காண்கிறோம்.

> **"ஒருவராய், சாவாமை உள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும்,காணக்கூடாத வருமாயிருக்கிறவர்....................".**

சேரக்கூடாத ஒளி என்றால் **"GLORY"**

ஒரு மனிதனை அன்றாட வாழ்க்கையில் குழியில் இருந்து தூக்கி எடுக்கும் தேவ புயத்தின் மகிமையையும், குழியில் தள்ளும் இருளின் கரத்தையும் புரிந்துகொள்வதற்கு ஏதுவாக வெளிச்சத்தையும் இருளையும் பிரித்துப் பார்ப்போம்.

	ஒளி	இருள்
(I).	வெளிச்சத்தை உள்ளடக்கியது பேரொளி, அதாவது "GLORY"	இருளை உள்ளடக்கியது "GLORY"- ல் வெளிச்சம் என்று பொருள்படும்,(Light =" L") "L" போய்விட்டால், அந்தவார்த்தை " GORY", என்றாகி விடும். இதற்கு அகராதியில் அர்த்தம், "இரத்தம் தோய்ந்த, இரத்த வெறி கொண்ட...."
(ii).	ஒளியில் இருந்தால், இருக்கும் இடம் புரியும் போகும் வழி தெரியும்.	இருளில் இருந்தால் இருக்கும் இடம் புரியாது போகும் வழியும் தெரியாது.
(iii).	நம் ஆடையில் ஒரு சிறு கறை பட்டால் கூட ஒளியில் இருந்தால் கறை தெரியும்.	இருளில் இருந்தால் கறை இருளோடு கலந்து மறையும்.
(iv).	ஒளி இருளை அழித்துவிடும்.	இருளால் ஒளியை அழிக்க முடியாது.

v(a). இப்போது ஒரு காலி மண் பாத்திரத்தை எடுத்து கொள்வோம், அதை தண்ணீரால் நிரப்பினோம் என்றால், தண்ணீரின் வடிவம் அந்த பாத்திரம்.

(b) இப்போது மண் பாத்திரத்தில் உள்ள தண்ணீரை வெளியே கொட்டிவிட்டோம் என்றால் அது காலி பாத்திரமாக இருக்கும், அதை மூடினோம் என்றால் அதன் உள் வியாபித்திருப்பது "இருள்". இப்போது இந்த இருள் அந்த பாத்திரத்தின் வடிவத்தில் இருக்கிறது.

c) இப்போது மண் பாத்திரத்தில் ஒரு துவாரம் உண்டு பண்ணினால் ஒளி உட்புகும். அதாவது வழி கொடுத்தால் மட்டுமே ஒளி உட்புகும், இல்லையேல் பாத்திரத்தின் வடிவத்தில் இருள் நிரம்பி இருக்கும்.

மேலும் எல்லா கோளங்களுக்கும் சுற்றுவட்டத்தை நிர்ணயித்த தேவன், முழு மனுகுலத்தில் ஒவ்வொருமனிதனுக்கும் திறந்த வழி தடத்தை தன் சுய விருப்பபடி இரண்டு எல்லைகளுக்குள் (பிறப்பு, இறப்பு) கடந்து செல்ல நிர்ணயித்துள்ளார். தேவனின் மகிமையையும் அவர் மனிதனை தன்னோடு ஈர்த்துக்கொள்வதற்கு எதை மையமாக வைத்து செயல்படுகிறார் என்பதை உணரும்படியாய் ஒரு வரைபடம் **(GRAPH)** புத்தகத்தின் மத்தியில் கொடுக்கப்பட்டுள்ளது. அதை பார்த்து கிரகித்து, நீதியின் தேவனின் அனாதி அன்பினால் ஈர்க்ப்பட, அவருடைய நீதியிலும் இரக்கத்திலும் நடைபொடுவோம்.

ரோமர் 10:3

"எப்படியென்றால், அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்கு கீழ்ப்படியாதிருக்கிறார்கள்."

இறைவனின் சிங்காசனத்தின் அஸ்திவாரத்தை நோக்கி நடைபோட்ட மக்கள்

பழ.ஏற்பாடு: 1.ஏனோக்கு. 2.நோவா. 3.ஆபிரகாம். 4. ஈசாக்கு. 5.யாக்கோபு 6.யோசேப்பு. 7.மோசே. 8.சாமுவேல். 9.ஏலியா. 10.எலிசா. 11.நாகமான். 12.தாவீது. 13.சாலமோன். 14.யோபு. 15.ஏசாயா முதல் மல்கியா

பு.ஏற்பாடு:1.யோசேப்பு. 2.சகரியா. 3.சிமியோன். 4.கொர்நேலியு---

தேவன் இவர்களை பின்தொடர்ந்தார்

7. தேவனை அறிகிற அறிவு

தேவன், அநீதியில் நடந்த ராஜாவின் ராஜ்யபாரத்தை பார்த்து கூறுகிறார் எரேமியா : 22:15 – 16

எரேமியா 22:15, **"நீ கேதுரு மர மாளிகையில் உலாவுகிறபடியினாலே ராஜாவாயிருப்பாயோ? உன் தகப்பன் போஜன பானம் பண்ணி, நியாயமும் நீதியும் செய்தபோது அவன் சுகமாய் வாழ்ந்திருக்கவில்லையோ?"**

எரேமியா 22:16, **"அவன் சிறுமையும் எளிமையுமானவனுடைய நியாயத்தை விசாரித்தான், அப்பொழுது சுகமாய் வாழ்ந்தான், அப்படி செய்வதல்லவோ "என்னை அறிகிற அறிவு" என்று கர்த்தர் சொல்கிறார்".**

எரேமியா 9:23, 24–ல் தேவன் சொல்கிறதை கேளுங்கள்

எரேமியா 9:23, **"ஞானி தன் ஞானத்தைக் குறித்து மேன்மை பாராட்ட வேண்டாம், பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக் குறித்து மேன்மை பாராட்ட வேண்டாம், ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தை குறித்து மேன்மை பாராட்ட வேண்டாம்."**

எரேமியா 9:24, **"மேன்மைபாராட்டுகிறவன், பூமியிலே கிருபையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான், என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மை பாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்கிறார், இவைகளின் மேல் பிரியமாயிருக்கிறேன். என்று கர்த்தர் சொல்லுகிறார்."**

இந்த தேவசட்டப் புத்தகத்தில் மனிதன் மேன்மை பாராட்ட தேவன் அனுமதித்த ஒரே இடம் நியாயத்தையும், நீதியும் செய்கிறவர் தேவன் ஒருவரே என்பதை அறிந்துகொள்வதே உணர்ந்து கொள்வதே.

8. நீதியின் தேவன் ஏன் பூமி எங்கும் உலாவுகிறார்

II. நாளாகமம்–16:9, **"தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக்கொண்டிருக்கிறது..............".**

இந்த நீதியின் தேவன் அவர் எப்படிப்பட்டவர் என்றும், இறைவன் அளவிடமுடியாத அளவுக்கு உண்மை உள்ளவர் என்றும் அவர் அளவிடமுடியாத அளவுக்கு மகாநல்லவர் என்றும், ஒரு மனிதன் உணர்வான் ஆனால், அவனை தேவன் தேடி செல்வதை இந்த சட்டப்புத்தகம் முழுவதும் பார்க்கலாம்.

இப்போது சங்கீதம் 101.6 யை பார்ப்போம்,

"தேசத்தில் உண்மை உள்ளவர்கள் என்னோடு வாசம் பண்ணும்படி என் கண்கள் அவர்கள் மேல் நோக்கமாயிருக்கும்,..............".

தேவன் உண்மை உள்ள மனிதன் எங்கே இருக்கிறார் என்று, ஒரு நாட்டிலே, ஒரு மாநிலத்திலே, ஒரு மாவட்டத்திலே, ஒரு கிராமத்திலே அவர் தேடித் திரிகிறார், உண்மை உள்ள மனிதனை அவர் கண்டுபிடித்தார் என்றால் என்ன சொல்கிறது இந்த சட்டப்புத்தகம்?" என்னோடு, வாசம் பண்ணும்படி **என் கண்கள் அவர்கள் மேல் நோக்கமாயிருக்கும்".** அதாவது அவனை தொடர்ந்து கனி உள்ள வாழ்கைக்கு நேராய் நடத்தி அவரை அறிகிற அறிவை உணர்த்தி, தன்னோடு வைத்து கொள்ளும்படியாய் அழைத்து செல்லும் படியாய் தொடர்கிறார்.

இவ்வாறாக தேவன் தேடி திரிந்த ஒருமனிதனை இப்போது பார்க்க போகிறோம்.

அப்போ–10:3, **பகலில் ஏறக்குறைய ஒன்பதாம்மணி நேரத்திலே தேவனுடைய தூதன் தன்னிடத்தில் வரவும், கொர்நேலியுவே என்று அழைக்கவும், பிரத்தியட்சமாய்த் தரிசனங் கண்டு,**

அப்போ– 10:4, அவனை உற்று பார்த்து, பயந்து, ஆண்டவரே என்ன என்றான். அப்போழுது அவன், உன் ஜெபங்களும், உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக, அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது.

அப்போ– 10:5, இப்பொழுது நீ யோப்பா பட்டணத்துக்கு மனுஷரை அனுப்பி, பேதுரு என்ற மறுபேர் கொண்ட சீமோனை அழைப்பி.

தேவன் இறங்கி வருகிறார், ஒரு தேவதூதனை அனுப்புகிறார். அவர் வந்து கொர்நேலியுவிக்கு தெரியப்படுத்துகிறார். பரிசுத்த பேதுரு எங்கே இருக்கிறாரென்பதையும், அவர் விலாசத்தையும் கொடுக்கிறார். இந்த பரிசுத்த பேதுரு கொர்நேலியு வீட்டில் வந்து என்ன பேசுகிறார் பாருங்கள்.

அப்போ–10:34, அப்பொழுது பேதுரு பேசத் தொடங்கி, தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும்

அப்போ–10:35, எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ, அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்.

இந்த பரிசுத்த பேதுரு சொன்ன வார்த்தைகளைப் பாருங்கள், தேவாதி தேவனுக்கு எந்த ஜனம் என்று இல்லை, எந்த ஜாதி என்றும் இல்லை, இரக்கத்திலும் நீதியிலும் நடப்பவர் எவரோ, அவரையே நோக்கிக் கொண்டிருக்கிறது அவர் இருதயம்.

<u>பண்டிட் தர்ம பிரகாஷ் சர்மா</u>

நம் பாரத நாட்டில் நாம் வாழும் நாட்களில், தேவன் தேடி சந்தித்த மனிதரை பார்ப்போம். ராஜஸ்தான் மாநிலத்தை சேர்ந்த பண்டிட் தர்மபிரகாஷ் சர்மா அவர்கள் சுய சரிதத்தை, 11/4/2010 அன்று நேரடியாக அவரே சொல்ல நான் கேட்கும் பாக்கியம் பெற்றேன். இவர் இந்திரா காந்தி அம்மையார் பாரதபிரதமராக இருந்த போது ராஜஸ்தான் மாநில கட்சி தலைவராக இருந்து தேவ உணர்வு அடைந்து அந்த பதவியை ராஜினாமா செய்தார். இவருடைய தந்தை 420 ஆலயங்களை கொண்ட புஸ்கர் பீடத்தின் தலைமை ஆச்சாரியார்.

இவரது பெற்றோர், சுதந்திர போராட்ட வீரர்கள் காந்திஜியுடன் சிறையில் இருந்தார்கள். எனவே இவர் **6 வருடம் காந்திஜியின் வாரதா ஆசிரமத்தில் வளர்க்கப்பட்டார்.**

இவரது பெற்றோருக்கு குழந்தை இல்லாத படியால், இவரது தாயார், சிருஷ்டிப்பின் தேவனிடம் வேண்ட, அதன் பலனாக "பண்டிட் தர்மபிரகாஷ் சர்மா" பிறந்தார். இவரது தாயார் இறைவனை நினைத்து, மொட்டை மாடியில் ஆர்மோனியம் இசைத்து உருகுவார்களாம், சர்மா அவர்கள் அம்மா ஏன் அழுகிறீர்கள் என்று கேட்டார். "நான் பரம பிதாவின் அன்பை நினைத்து உருகுகிறேன்" என்று அம்மாவின் பதில் அவர் மனதில் பதிந்துவிட்டது. அவர் வாலிபன் ஆனபோது மனிதனுக்கு வழிகாட்டும் எல்லா, மதங்களின் ஞான நூல்களில் பரமபிதாவைத் தேடினார். ஆனால் பரமபிதாவைக் காணமுடியவில்லை ஆனால் தேவனோ இவரைத் தேடிவந்தார்.

இவர் இரண்டாம் ஆண்டு கலை கல்லூரியில் படித்த போது அடுத்த நாள் பாடமாகிய தேவ சட்டப்புத்தகத்தில் உள்ள மலைபிரசங்கத்தை வெறுப்போடு படிக்க ஆரம்பித்த போது "மகாத்மா காந்தியின் வாழ்க்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது இந்த **"மலைபிரசங்கம்"** என்று குறிப்பிடப்பட்டதை பார்த்தார்.

தான் காந்திஜியின் வாரதா ஆசிரமத்தில் 6 வருடம் இருந்ததை நினைவு கூர்ந்து சொல்கிறார், **"காந்திஜியின் வாழ்க்கை மலைபிரசங்கத்தின் உள்ள "அருளுரையால்"** மாற்றப்பட்டது, சுதந்திர போராட்டத்தின் முக்கிய சாராம்சமான **"அகிம்சை"** என்ற கொள்கை இந்த மலைபிரசங்கத்தில் இருந்து தான் எடுக்கப்பட்டது.

வாரதா ஆசிரமத்தில் ஒவ்வொருநாள் அதிகாலையிலும் காந்திஜி அவர்கள் மலைபிரசங்கத்தைச் சொல்லி பேசுவதும், ஜெபிப்பதும் வழக்கம் என்று குறிப்பிடுகிறார்.

பண்டிட் தர்ம பிரகாஷ் சர்மா அவர்கள் மலைபிரசங்கத்தில் உள்ள பாக்கியவான்கள் பட்டியலை படித்த போது யாரோ அவரோடு பேசுவதை உணர்ந்தார். சுமார் 1000 சூரியன் இருப்பதை காட்டிலும் ஆச்சரியமான ஒளிக்கதிர் அவர் அறையை நிரப்பியது. இவ்வாறாக, தேவன் இவரை சந்தித்தார்.

அவர் தனது பெற்றோரை பற்றி குறிப்பிடுகையில் சொல்கிறார் "**என் தகப்பனும் தாயும் நல் மனிதர்கள். அவர்கள் வாழ்க்கை தெய்வீக குணங்கள் நிறைந்தது. பரிசுத்தமாய் வாழ்ந்தவர்கள். அவர்கள் சமூக தலைவர்கள் மட்டுமல்ல, மத தலைவராகவும் இருந்தார்கள்**".

இவ்வாறாக ஜாதி, மத, பேதமின்றி தேவ இரக்கத்திலும், நீதியிலும் நடந்த மக்களை அவர்கள் சந்ததியை சந்திக்கும்படி தேவனுடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது.

<u>பூமி எங்கும் உலாவுகிற தேவன் நாட்டுக்கு என்ன செய்தார் என்றுபார்ப்போம்.</u>

1611 –ம் ஆண்டு கிரேட் பிரிட்டனுக்குள் ஒளி பிரவேசித்த ஆண்டு. அதாவது ஆங்கிலத்தில் தேவசட்டப்புத்தகம் நாட்டிற்குள் பிரவேசித்த நாள். முதல்முதலாக அதை ஆர்வத்துடன் படித்து உணர்வடைந்த மனர், உலகம் முழுவதும் சென்று (I) மருத்துவமனை, (II) பள்ளிக்கூடம், (III) கல்லூரி, (IV) அனாதை விடுதி, (V) ஏழைகள் காப்பகம், என்று தேவ இரக்கத்தையும் தேவ நீதியையும் சட்டப்புத்தகத்தின் மகத்துவங்களையும், உலகத்திற்கு உணர்த்தினார்கள். **இதனால் ஆச்சரியமான தேவநீதி வெளிபட்டது. எப்படியென்றால், இந்த மக்களின் நற்கிரியைகளை பார்த்த தேவன் ஒரு குட்டி நாட்டை உலகத்தையே ஆளும்படி அவர்கள் கையை பலப்படுத்தினார்.** ஆனால் அந்த நாடு இன்று தேவனுடைய சட்டப்புத்தகத்தை பழைய புத்தகக் கடையில் போட்டு விட்டார்கள் அதன் பலனை இன்று அறுக்கிறார்கள்.

நீதிமொழிகள் 14:34, "**நீதி ஜனத்தை உயர்த்தும்;—**"(Righteousness exalts a nation;—)

இதனை தானியேல் 2:21 தெளிவுபடுத்துகிறது. "**அவர் காலங்களையும், சமயங்களையும், மாற்றுகிறவர். ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர்; ஞானிகளுக்கு ஞானத்தையும், அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவர்.**"

இவ்வுலகில் வாழ்ந்த, வாழுகின்ற ஒ

அண்ட சராசரங்களையும் படைத்து எல்
ஸ்ருஷ்டிகர், மனிதனை திறந்த தடத்
எல்லைகளுக்குள் கடந்து செ



ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கைத் தடம்

...லா கோளங்களுக்கும் எல்லையை நிர்ணயித்த
...த்தின் வழியாக தன் சுய விருப்பப்படி இரண்டு
...ல நிர்ணயித்துள்ளார். (பிறப்பு, இறப்பு)



எவர் ஒருவர் இறைவனின் நீதியிலும் இரக்கத்திலும் நடைபோடுகிறாரோ அவர் ஆவி இறை வெளிச்சத்தின் பால் ஈர்க்கப் படுகிறது. இறை வெளிச்சத்தில் சக்திபெற்ற ஆவி ஒரு ஏவுகோலாய் (LAUNCHER) ஆன்மாவை கடைசிநேரத்தில் (AT LAST BREATH) ஒளியை நோக்கி மேலே இழுத்து செல்கிறது.

எவர் ஒருவர் இறைவனின் நீதியிலும் இரக்கத்திலும் நடை போட தவறி, சுய நீதியில் நடை போட்டால் அவர் ஆவியை இருள் கவ்விக்கொள்கிறது. இருளால் பிடிபட்ட ஆவி ஆன்மாவை இருளை நோக்கி கீழே இழுத்து செல்கிறது(அம்புக்குறியை பார்க்கவும்).

9. ஒரு மனிதன் தேவநீதியில் நடந்தால் என்ன நடக்கும்?

முழு உலகமும் பாலியல் பாவத்தால் விழுந்த போது தேவன் உலகத்தை அழிக்க சித்தம் கொண்டார், நோவாவை பார்த்து சொல்கிறார்.

ஆதியா– 7:1, **"....................இந்த சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக்கண்டேன்".**

மேலும் II. பேதுரு 2:5–ல், **"பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியை பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப்பாற்றி அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின்மேல் ஜலபிரளயத்தை வரப்பண்ணி",**

இன்னும் தொடர்ந்து சொல்கிறார், சோதோம் கொமாரா பட்டணங்களையும், சாம்பலாக்கிக் கவிழ்த்து போட்டு, இவ்வாறாக தேவநீதி வெளிப்பட்டது .

தேவன் சிலுவையில் அறையபட்டபோது ஒருகள்ளன் தூசிக்கிறான் அதே நேரத்தில் மற்றொருகள்ளன் கூறுகிறான்.

லூக் –23:41, **"நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம், நாம் நடப்பித்தவைக்ளுக்கு தக்க பலனை அடைகிறோம். இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே ...."**

இவ்வாறாக நீதியின் வார்த்தைகள் வெளிப்பட்ட உடன் தேவன் பதில் கொடுத்துவிட்டார், **" இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் ...."**.

சங்கீதம் – 37:23, **"நல்ல மனிதனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும், அவனுடைய வழியின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார்".**

சங் – 37:24, **"அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை, கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார்"**.

சங் 37:25, **"நான் இளைஞனாயிருந்தேன், முதிர் வயதுள்ளவனுமானேன், ஆனாலும் நீதிமான் கைவிடப் பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை".**

மா மன்னனாகிய தாவீது ராஜா தன் ஆயுள் நாட்கள் முழுவதும் பார்க்கிறார். தன் நாட்டில் உள்ள மக்களை, அவர்கள் சந்ததியை கவனித்து பார்க்கிறார். ஒன்று காண்கிறார் நீதிமான் யாரையும் கை ஏந்தாமல் வாழ்வதையும், துன்மார்க்கனோ அப்பத்துக்கு கையேந்தி நிற்பதையும் காண்கிறார். **மேலும்**

"கர்த்தருடைய கண்கள் நீதிமான் மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது".(சங்–34:15, I.பேதுரு 3:12,)

நீதி.15:9, **"------நீதியை பின்பற்றுகிறவனையோ அவர் நேசிக்கிறார்".**

இங்கே அவர் சிநேகிக்கிறார் என்று சொல்லவில்லை. நேசம் என்பது பக்தி, பயம், பாசம், அன்பு, ஆசை, இத்தனையும் உள்ளடக்கியது. இந்த வார்த்தையை பயன்படுத்தி நீதியை பின்பற்றுகிறவர்களை நேசிக்கிறார் என்று எழுதுகிறார்.

லூக்கா–4:27. **"அல்லாமலும் எலிசா தீர்க்கதரிசியின் காலத்திலே இஸ்ரவேலருக்குள்ளே அனேகம் குஷ்டரோகிகள் இருந்தார்கள், ஆயினும் சீரியா தேசத்தானாகிய நாகமானேயல்லாமல் அவர்களில் வேறொருவனும் சுத்தமாக்கப்படவில்லை என்று சத்தியத்தின்படியே உங்களுக்குச் சொல்கிறேன் என்றார்".**

ஏன் தேவன் அவ்வாறு கூறினார், சட்டப்புத்தகத்தின் மறைபொருள் இங்கே புதைந்துள்ளது. II.இராஜாக்கள் 5:1, 18 யை தியானித்தால், சேனை தளபதி நாகமான் ஒரு உண்மையும், உத்தமனுமானவர் என்பது தெரியும். எனவே தேவன் அவரை தொடர்கிறார், தொடர்ந்து அவரை சுத்தப்படுத்துக்கிறார். அதுமட்டுமல்ல சட்டப்புத்தகத்தின் முதல் சட்டத்தில் இருந்தும் விடுவிக்கபடுகிறார். இதை II. இராஜாக்கள் 5:18–ல் பார்க்கலாம்.

நீதியில்நடந்தால் அதன்முடிவு

நீ உத்தமனை நோக்கி, செம்மையானவனை பார்த்திரு; அந்த மநிதனுடைய முடிவு சமாதானம். (சங் 37:37)

" நீதியின் பாதையில் ஜீவன் உண்டு, அந்த பாதையில் மரணம் இல்லை". (நீதி. –12:28,)

10. தேவனை ஈர்க்கும் நீதியின் கிரியை

சங்கீதம் – 112:9, வாரி இறைத்தான் ஏழைகளுக்கு கொடுத்தான் அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும், அவன் கொம்பு மகிமையாய் உயர்த்தப்படும்:"

ஏழைகளுக்கு இரங்குகிறவனுடைய கொம்பு மகிமையாய் உயர்த்தப்படும், என்று சங்கீத காரணாகிய தாவீது ராஜா தேவனின் இருதயத்தை உணர்ந்தவராய் சொல்கிறார்.

ஏசாயா – 58:7, "பசிஉள்ளவனுக்கு உன் ஆகாரத்தை பகிர்ந்து கொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்து கொள்கிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால், அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்.

ஏசாயா – 58:8, – அப்பொழுது விடியற்கால வெளுப்பைப்போல உன் வெளிச்சம் எழும்பி, உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும், கர்த்தருடைய மகிமை உன்னை பின்னாலே காக்கும்.

தேவன் என்ன சொல்கிறார் பாருங்கள், பசியாய் இருப்பவனை போசிப்பதும், வஸ்திரம் இல்லாதவனுக்கு வஸ்திரம் கொடுப்பதும், வாழ்ந்திருக்கும் போது உன் உடன் பிறப்புகளுக்கு உதவுவதும் தான் தேவனுக்கு ஏற்ற உபவாசம். அது மட்டுமல்ல இப்படி செய்கிறவனின் நீதியின் கிரியையை பார்த்து தேவன் கூறுகிறார், உன் சுக வாழ்வு சீக்கிரத்தில் துளிர்க்கும், உன் நீதி உனக்கு முன்னாலே சென்று உன்னை மேன்மை படுத்தும். உன்னை காக்க **தேவனின் அதரிசனமான கரம் உன்னை பின் தொடரும்**

தேவன் எவ்வளவாய் நீதியையும் இரக்கத்தையும் மேன்மைப்படுத்தி கொண்டு வருகிறார் பாருங்கள். மேலும் தேவ இருதயத்தை அறிய,

நீதிமொழிகள் –21:3, பலியிடுவதைப் பார்க்கிலும் நீதியும், நியாயமும் செய்வதே கர்த்தருக்குப் பிரியம்.

மத்தேயு 25:34–46, லூக்கா– 10:30–35, 16:19–23 வரை படித்து தேவ இருதயத்தை புரிந்து கொள்ளுங்கள்.

11. தேவ எச்சரிப்பு

மத்தேயு 7:18 நல்ல மரம் கெட்ட கனிகளை கொடுக்கமாட்டாது, கெட்ட மரம் நல்ல கனிகளை கொடுக்க மாட்டாது.

மத்தேயு 7:19 நல்ல கனி கொடாத மரமெல்லாம், வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்.

மத்தேயு 7:20 ஆதலால் அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்.

<u>காட்டு மரம்</u>

இதை நான் தெளிவாக விளக்குகிறேன். இப்போது காட்டில் வளரும் கனியற்ற ஒரு காட்டு மரத்தை எடுத்துக்கொள்வோம். அது உயர்ந்த குன்றுகளில் உயரமாகவும், பலமுள்ளதாயும் வளருவதால் வேர்களை ஆழமாகவும், பக்கவாட்டிலும் பரவவிடுகிறது. அது கிளைகளையும், எல்லா திசையிலும் பரவ விடுகிறது. மேலும் அருகில் உள்ள மரத்தின் சாரத்தையும் தாண்டி, அடுத்த மரத்தின் சாரத்தையும் உறிஞ்சிக் கொள்கிறது.

இந்த கடைசி காலத்தில் நாட்டு மரமெல்லாம் காட்டு மரமாகிவிட்டது. நாட்டு மரம் உயர்ந்த ஸ்தானங்களில் வேர்களை பாய்ச்சுகிறதற்கு ஏதுவாக தனது சூழ்நிலையைத் தேடி அங்கே ஆழமாய் வேர்களை விடுகிறது. மேலும் பராக்கிரமும், பெலனும் அடைந்த நாட்டு மரம், கனியற்ற காட்டு மரமாக உருவெடுக்கிறது, வானளாவி வளர்கிறது. அதனுடைய கிளைகளை உலகத்தின் கடையாந்தரம் வரை விரிக்கிறது, அதே நேரத்தில் கனிதரும் மரங்களின் சத்துவத்தை உறிஞ்சிக் கொள்கிறது. மேலும் வானளாவி உயர்ந்து வளர்ந்தபடியால் கனி கொடுக்கும் மரங்களுக்கு வர வேண்டிய, ஒளியை தடுத்து அதை வளரவிடாமல் தடுத்து விடுகிறது. மேலும் கனிதரும் மரத்தின் சாரை உறிஞ்சுவதற்காக தன் நிழலின் கீழ் வைத்து கொள்கிறது. உயர்ந்து வளர்ந்த வல்லமையும் பராக்கிரமமும் உடைய கனியற்ற, கட்டுக்கு அடங்காத காட்டு மரத்துக்கு **தேவன் செய்ய போவதை மத்தேயு 7:21–23–ல் அறிவித்துள்ளார்.**

அதை படித்து தெரிந்து கொள்ளுங்கள், அறிந்து கொள்ளுங்கள். தேவன் அறிவித்த ஆழத்தையும் அவர் இறுதித்தீர்பையும், காட்டு மரத்தின் முடிவையும் சிந்தித்து உணருங்கள்.

<u>கனி தரும் மரம்</u>

அதே நேரத்தில் ஒரு கனி கொடுக்கும் மரத்தைப் பார்போம். ஒரு தென்னை மரத்தை எடுத்துக்கொள்வோம். அது கனி கொடுக்க ஆரம்பித்தவுடன் அதன் சொந்தக்காரர் மரத்தை சுற்றி வேலி போடுகிறார், பின் சுற்றிலும் குழி தோண்டி உரம் போடுகிறார். மேலும் அதன் தலையை சுத்திகரிக்கிறார், காய்ந்த ஓலைகளை எடுத்து விடுகிறார். இவ்வாறாக இந்த மரம் அதிக கனிகளைக் கொடுக்கும் படியாய், சுத்தம் செய்கிறார். தேவனும் நாம் கனிகொடுக்க ஆரம்பிக்கும் போது அவர் நெருங்கி வந்து நம்மை சுத்தம் பண்ணுகிறார். எதற்காக என்றால் நம்மை அழைத்து செல்லும் படியாய் தன்னோடு வைத்து கொள்ளும் படியாய், தொடர்கிறார்.

(ii) I. தீமோத்தேயு – 5:24,

“சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருந்து நியாயத் தீர்ப்புக்கு முந்தி கொள்ளும், சிலருடைய பாவங்கள் அவர்களைப் பின்தொடரும்”.

இதை நான் விளக்குகிறேன். என் நண்பர் ஒருவர் என் அலுவலகத்திற்கு வருகிறார், அவர் தன்னிடம் உள்ள 5–லட்சம் ரூபாயை எடுத்து செல்வது சிரமம், என்று என்னிடம் கொடுத்துச் சென்றார். அடுத்த நாள் வந்து கேட்கும் போது நான் சொல்கிறேன்; நீர் எங்கே கொடுத்தீர் என்று, **இது துரோகம்.** இதே நேரத்தில் எனக்கு ஒரு தங்கை இருக்கிறாள், அவள் ஏழை. அவள் தன்னிடம் உள்ள உடைமைகளை என்னிடம் கொடுத்துவிட்டு வேலைகாரியமாக வெளியூர் செல்கிறார். சுமார் 3–வருடம் கழித்து வந்தபோது, அவள் உடைமைகளை கேட்டபோது நான் சொல்கிறேன்: "நீ எங்கே கொடுத்தாய் என்று," **இது படுதுரோகம்.** இதை தான் தேவன் சொல்கிறார் சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாக இருந்து நியாய தீர்புக்கு முந்தி கொள்ளும். இந்த பாவம் நியாய தீர்ப்பு நாள் வரை காத்திருக்காது, அடுத்த நாளோ அல்லது அடுத்த வாரமோ கதவைத் தட்டும்.

செப்பனியா– 3:1, **“இடுக்கண் செய்து, ஊத்தையும் அழுக்குமாயிருக்கிற நகரத்துக்கு ஐயோ!”**

தேவன் நகரத்தில் உள்ள சாக்கடையை சொல்லவில்லை, நகரத்தில் உள்ள மக்களின் வாழ்க்கையை குறிப்பிடுகிறார். உலகம் முழுவதும் நகரத்தில் உள்ள மக்கள் தேவ பயமில்லாமல், தன் மனம் போன போக்கில் வாழ்ந்து தன்னை கெடுத்துக் கொள்வதையும், நாட்டை சீரழிப்பதையும் நாம் கண் கூடாகப் பார்த்து கொண்டிருக்கிறோம்.

இளைய தலைமுறைக்கு எச்சரிப்பு

“வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும், உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட, ஆனாலும் இவை யெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி”

பிரசங்கி– 11:9,

சாலமோன் ராஜா தேவன் தனக்கு கொடுத்த ஞானத்திலே, இதை இளையதலைமுறைக்கு எழுதுகிறார். நீ உன் மனதின் விருப்பப்படி எப்படியும் நட, ஆனால், ஒன்று தெரிந்து கொள், தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி. அது எப்படி என்று விளக்குகிறேன். (i). உன் பரம்பரையைப் பார்க்கிறார், (ii).இளமை காலம் முழுவதும் உன் நடைகளை அவர் கவனித்து அறிகிறார், (iii). இளமை, காலத்தில் உன் நினைவுகளை ஸ்கேன் பண்ணுகிறார், முடிவிலே நீதி–19:14 ....யை பொருத்துகிறார்,

நீதி–19:14, **“வீடும் ஆஸ்தியும் பிதாக்கள் வைக்கும் சுதந்திரம்,புத்தி உள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈ.வு.”**

வானமும் பூமியும் தனி மனிதனுடைய அன்றாட கணக்கு பதிவு வங்கி

“ஒவ்வொரு கிரியையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும், தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டு வருவார்”. (பிரசங்கி–12:14),

தேவன் நம்மை பார்த்துக் கொண்டேயிருக்கிறார், என்று சாலோமோன் ராஜா சொல்கிறார்.

ஒரு மனிதன் தன் வாழ்க்கையைப் பின்னோக்கிப் பார்ப்பானேயாகில் முன்னே நடக்கிற காரியங்கள் யாவிலும், தேவன் இடைபட்டுக் கொண்டிருக்கிறார், ஒரு நீதிபரர் இடைபட்டுக்கொண்டிருக்கிறார் என்பதை உணரமுடியும்.

தேவ ஞானம்

உறவுகளில் கணவன் மனைவி உறவுதான் உள்ளமும் உடலும் பிணைவதால், அதன் ஆழத்திலும் நெருக்கத்திலும் உறுதியானது. இந்த உறவில் கூட கணவன் நினைவு என்னவென்று மனைவி அறியாள், அது போல மனைவி நினைவு என்னவென்று கணவன் அறியான், ஆனால் தேவனோ, 700 கோடி மக்களின் நினைவையும், கனவையும், அறிந்து கொண்டே தெரிந்து கொண்டேயிருக்கிறார். அவர் எப்படி இருதயத்தை கண் காணிக்கிறார் என்பதற்கும் அவருடைய ஞானத்தின் ஆழத்தை அறிந்து கொள்வதற்கும் ஏதுவாக. யோபு 37.7–யை ஆழமாய் ஆராய்வோம்

யோபு – 37.7, **“.........அவர் சகல மனுஷருடைய கையையும் முத்திரித்துப் போடுகிறார்”.**

வானம்:

அதாவது **பார் கோடு** போட்டிருக்கிறார், நம் வீட்டில் மொட்டை மாடியில் உள்ள 2’–0 விட்டமுள்ள ஒரு டிஷ் ஆன்டனா உலகத்தில் உள்ள அத்தனை கோப்புகளையும் கொண்டு வந்து விடுகிறது. தேவனோ வானத்தை இழுத்து நிறுத்தி ஒரு டிஷ் ஆன்டனாவாக நிலை நிறுத்தியிருக்கிறார், பார் கோடு வழியாக, மனிதனின் கையில் போட்ட பார் கோடு வழியாக உள்ளும், புறமும் ஸ்கேன் ஆகிக்கொண்டேயிருக்கிறது, ஒரு மனிதனுடைய அந்தரங்கமான காரியங்கள் அத்தனையும் தேவனுக்கு வெளியரங்கமாகிறது. இது எப்படி என்றால் உலகத்தில் உள்ள அத்தனை கம்பியூட்டர் சேர்ந்தாலும், அவருடைய கம்பியூட்டரில் ஒரு சிப்புக்கு இணையாகாது, **அவர் சர்வ ஞானி.**

பூமி

அது மட்டுமல்ல மேலும் ஒவ்வொருவருடைய கால் நடைகளை நாம் எங்கே செல்கிறோம் என்பதையும் பூமி பதிவு செய்கிறது. எதற்காக என்றால்

சங் – 50:4, (யோபு ,20:27, உபாகமம், 30:19)

"அவர் தம்முடைய ஜனத்தை நியாயந்தீர்க்க உயர இருக்கும் வானங்களையும் பூமியையும் கூப்பிடுவார்".

அதாவது வானமும் பூமியும் அவர் தீர்ப்பின் போது ஒவ்வொருவருடைய வாழ்க்கையை குறித்து தேவனிடத்தில் சாட்சி கொடுக்க அவைகள் தன் தன் நிலையிலே நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது.

<u>தேவ எச்சரிப்பின் மகத்துவம்</u>

கீழே குறிப்பிட்ட தேவ வார்த்தைகளை தியானித்து தேவ இருதயத்தை புரிந்து கொள்ளுங்கள்

(I) மத்தேயு –5:18–19, 21:31, 32, லூக்கா– 7:29
மத்தேயு– 23:15, 23, 24, ரோமர்– 2:11

(II) மத்தேயு– 19:24, மார்க் 10:25, லூக்கா– 18:25 லூக்கா– 16:13, லூக்கா 12:33, 34, மத்தேயு 10:8–10, மார்க் 6:8–9,லூக்கா– 10:4

(III) II தீமோத்தேயு– 4: 3,4, II பேதுரு– 2:1–3, மீகா– 2:11,

(IV) யாக்கோபு 3:1, 5:1, 5:9. I யோவான்– 3:7, 2தேச. 2:11

(V) எரேமியா– 5:1, 30,31 7:4, 17:9,10

(vi) ஏசாயா– 1:3, 10, 13, 15, 21,22, 23, 56:10, 11, ஆபகூக்–2:11
எசேக்கி–13:17,18, ஆமோஸ் – 6:3–5, ஓசியா–9:8

(vii) மத்தேயு 15:4–9, 23:16–19, நீதி 21:3, ஓசியா 6:6, ஆமோஸ் 4:4–5, ஆகாய் 2:11–14

12. கடைசி கால நிகழ்வுகள்

இவ்வுலகம் கடைசி காலத்திற்கு நேராய் ஓடுகிறது, இதை புரிந்து கொள்ளுவதற்கு ஏதுவாக மனித வாழ்க்கையின் இறுதி காலத்தை நோக்கி பார்ப்போம்.

ஒரு மனிதன் 90 வருடம் உயிரோடு இருக்கிறார் என்றால் அதை மூன்றாக பிரிக்கலாம். 1–30, வருடம் முதல் கட்டம், 30–60 வரை இரண்டாம் கட்டம், 60–90 வரை கடைசி கட்டம் அல்லது கடைசி காலம்.

ஒரு மனிதனுடைய கடைசி காலத்தில் அவன் உடல் நிலையில் உள்ள மாற்றங்களை ஆராய்வோம், அதே நேரத்தில் கடைசி கட்டத்தில் இருக்கிற உலகத்தின் மாற்றங்களையும் உற்று பார்ப்போம்.

மனிதனுடைய சரீரம்	உலகம்
	உலகத்தை எடுத்து கொள்வோம் என்றால், அது பலநாடுகளால் ஆனது, ஒவ்வொரு நாட்டின் நரம்பு மண்டலமாய், வியாபித் திருப்பது குடும்பங்கள், மூளையாய் செயல்படுவது குடும்ப மக்களே
1) கடைசி காலத்தில் மனிதஉடலில் மூளை செயல் பாடு குறைந்து ஞாபக மறதி தோன்றும்	உலகமெங்கும் உள்ள நாட்டு மக்கள் அறிவு பெருத்து ஞானத்தில் தளர்ந்து, படைத்த இறைவனை மறக்கும் நிலை.
2) கடைசி காலத்தில் உடலில் நரம்பு மண்டலம் பெலன் குறைந்து நடை தளரும்	நாட்டின் நரம்பு மண்டலமாகிய குடும்ப வாழ்க்கையில் அன்பு என்னும் அடிமட்டம் தகர்ந்து குடும்ப வாழ்க்கை நடை தளர்ந்த நிலை. இதை தான் தினசரி பத்திரிக்கைகளில் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறோம்.

மனிதனுடைய சரீரம்	உலகம்
3) கடைசி காலத்தில் உடம்பில் இரத்த அழுத்தம் அதிகரிக்கும்	நாட்டின் மக்கள் எப்படியாவது ஒரு சில வருடங்களில் பணத்தில் பெருத்து விட வேண்டும் என்று அழுத்த பட்டவர்களாய், அங்கும் இங்கும் அனுதின வாழ்க்கையில் ஓய்வின்றி ஓடுகிறார்கள், வாழ்க்கையின் அழுத்தம் அதிகரித்து வருகிறது.
4) உடலில் கடைசி காலத்தில் பல வித அறுவை **சிகிச்சை** தேவைபடுகிறது இருதயஅறுவை **சிகிச்சை,** கிட்னி மாற்று அறுவை **சிகிச்சை,** கண் அறுவை **சிகிச்சை,** உடலில் பலவிதமான இரத்தம் சிந்துதல், இந்த நிலை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது, பின் உடல் பெலன் குறைந்து செயல் இழந்து கடைசி நேரத்தை நோக்கிச் செல்கிறது.	நாட்டிலே, உள்நாட்டு கலவரம், கொலை, தற்கொலை கற்பழிப்பு என நாட்டில் எங்கும் இரத்தம் சிந்துதல் தொடர்கிறது, நாளுக்கு நாள் இந்த குற்றங்கள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது, அதாவது கடைசி நேரத்தை நோக்கி நகருகிறது.

புதுயுகத்தின் ஆரம்பம்.

(மனிதனின் குணத்தில், அறிவில், பாட்டின் தொனியில் மாற்றம்----)

கடைசி கட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கும் மனுகுலத்தின் மனநிலையில் ஏற்படும் மாற்றங்களை பார்ப்போம்

II. **தீமோத்தேயு– 3:1–5,**

தீமோத் 3:1 **"மேலும் கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக.**

தீமோத் 3:2 **எப்படியெனில் மனுஷர்கள், தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும்,**

தீமோத் 3:3 **சுபாவஅன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர் களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும்,**

தீமோத் 3:4 **துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப் பிரியராயும்,**

தீமோத் 3:5 **தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதன் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்......."**

இத்தனையும் இன்று நடந்து கொண்டிருக்கிறது, மனிதர்கள் எல்லாருமே தற்பிரியராயும், பணப்பிரியராயும், இருக்கிறார்கள், தாய் தகப்பன் மாருக்கு கீழ்படியாத மக்களாயும் மாறி கொண்டு வருகிறார்கள். இதை இந்த சட்ட புத்தகம் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னதாகவே எழுதி வைத்துள்ளது.

தானியேல்– 12:4. " .... அனேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம்".

பரந்த உலகமும், சுருங்கி அறிவையும்,ஆற்றலையும், செல்வத்தையும் நாடி உலகை வலம் வரும் பயணம் எளிதாகி விட்டது. அறிவு நாளுக்கு நாள் பெருகி ஒளிமயமாய் **ஒரு மாயையாய்** முன் நிற்பதால், சிருஷ்டிகரை நோக்கிச் செல்லும் நீதியின் பயணத்தில் உலகக் கவர்ச்சி ஒரு தடைக் கல்லாய் குறிக்கிட்டு, ஒளியை நோக்கி செல்லும் பாதையை புரட்டிப் போடுகிறது.

ஆமோஸ் –8:3 , "அந்நாளிலே தேவாலயப் பாட்டுகள் அலறுதலாக மாறும்...............".

இந்த காலகட்டத்தில் ஆக்ரோஷமான பாடல்கள் ஊடுருவி உள்ளான மனிதனை ஈர்க்கிறது. ஆனால் மென்மையான பாடல் அல்லது இசை தொனி, ஒளியால் ஈர்க்கப்படுறது, ஒளியை நோக்கி நகர்த்துகிறது. ஆனால் எதிர்மறை அலறல் பாடல் அல்லது இசை தொனி, இருளால் ஈர்க்கப்பட்டு உள்ளான மனிதனை இருளை நோக்கி நகர்த் துகிறது. .

சூரியனில், சந்திரனில் அடையாளம்

26/10/2003, தின மலரில் வந்த செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். சுமார் 3.8 லட்சம் கி.மீ. விட்டமுள்ள கரும்புள்ளி சூரியனில் உருவாகி உள்ளது. அது 6/12/2011–ல் அதன் அளவு பெரிதாகி உள்ளது. அதைப்போல் சந்திரனில் சிவப்பு கதிர் உருவாகி 6/12/2011–ல் சுமார் 51 நிமிடம் சந்திரன் சிகப்பாக தெரிந்தது. இதை தான் யோவேல் கூறுகிறார்.

யோவேல் –2:31,"கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும்".

இந்த நிகழ்வுகள் யாவும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன.

<u>யுத்தங்களும், மகா பூமி அதிர்ச்சிகளும்,பஞ்சங்களும்</u> -----

லூக்கா 21:9 யுத்தங்களையும், கலகங்களையும் குறித்து நீங்கள் கேள்விப்படும்போது பயப்படாதிருங்கள், இவைகள் முன்னதாகச் சம்பவிக்கவேண்டியதே, ஆனாலும் முடிவு உடனே வராது.

லூக்கா 21:10 ... ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்.

லூக்கா 21:11 பல இடங்களில் மகா பூமி அதிர்ச்சிகளும், பஞ்சங்களும், கொள்ளை நோய்களும் உண்டாகும், வானத்தில் இருந்து பயங்கரமான தோற்றங்களும் பெரிய அடையாளங்களும் உண்டாகும்.

லூக்கா 21:25 சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும், பூமியின்மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும், சமுத்திரத்தின் அலைகளும் முழக்கமாயிருக்கும்.

சட்ட புத்தகத்தில் சுமார் 2000 வருடங்களுக்கு முன் வெளிப்படுத்தப்பட்ட இத்தனை காரியங்களும் இப்போது நிறைவேறிக் கொண்டிருக்கின்றன.

(I) **ஆகாயத்திலே அடையாளம்:** கோளங்கள் நேர் கோட்டிலே வருகின்றன, எரிகற்கள் பூமியை தாக்குகிறது.

(ii) **தண்ணீரிலே அடையாளம்:** கடலின் நீர் மட்டம் உயருகிறது, கடலின் அடியில் நீர் ஓட்டம் திசை மாறுகிறது, சுனாமி வருகிறது.

(iii) **பூமியிலே அடையாளம் :** நிலநடுக்கங்கள் விகிதம் அதன் அளவுகோல் எண் ஆண்டிற்கு, ஆண்டு அதிகரிக்கிறது. எரிமலை குமுறுகிறது, இந்த தேவ சட்டப்புத்தகத்தில் சொல்லபட்ட அத்தனை காரியங்களும் படி படியாய், நடந்து கொண்டும், நிறைவேறி கொண்டும் வருகிறது.

(iv) **<u>வைர கற்களால் ஆன கோளம்</u>**

இப்போது ஒரு புதிய நிகழ்வு நடந்தது, ஆகஸ்ட் 2011–ல் விஞ்ஞானிகள் வைரத்தினால் ஆன கோளம் ஒன்றை கண்டு பிடித்திருக்கிறார்கள், இந்த கோளம் முழுவதும் வைரகற்களால் ஆனது. இது இருக்கிற தூரம் சுமார் 4000 ஒளி ஆண்டுகள் என்று கணக்கிட்டுள்ளார்கள்.

அதாவது ஒரு ஒளிஆண்டு என்று சொல்வது 10 லட்சம் கோடி கி.மீ. ஒளியின் வேகம் வினாடிக்கு 3 லட்சம் கி.மீ. இந்த ஒளி ஒரு வருடத்தில் செல்லும் தூரம் தான் 10, லட்சம் கோடி கி.மீ. இப்படி 4000 மடங்கு தூரத்தில் உள்ளது. ஒரு ஒளிஆண்டு = $(9.46 \times 10^5) \times (10^7)$ கி.மீ.

நம்முடைய தேவனுடைய மகத்துவங்களை பாருங்கள், வானசாஸ்திரிகளால் கூட எதையுமே விபரமாக அறிந்து கொள்ள முடியவில்லை, தெரிந்து கொள்ள முடியவில்லை. வைரத்தினால் ஆன கோளம் தெரிவதை மட்டும் சொல்கிறார்கள்.

இந்த வைர கோளத்தை பற்றி தேவ சட்டப்புத்தத்தில் ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. சட்டப்புத்தகத்தின் கடைசி புத்தகமான வெளிபடுத்தல் 21–10,11–யை பார்ப்போம்.

வெளி – 21:10 "பரிசுத்த நகரம் பரலோகத்தை விட்டு தேவனிடத்தில் இருந்து இறங்கிவருகிறதை எனக்குக் காண்பித்தான்.

வெளி – 21:11 அதன் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக்கல்லை போலவும், பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லை போலவும் இருந்தது."

புதுயுகத்தில் எழும்பும் கேள்விகள்

இந்த கால கட்டத்தில் இளைய தலைமுறையினர் சிலர் ஒரு வினோதமான கேள்வி கேட்கிறார்கள், **"எல்லாவற்றையும் கடவுள் படைத்தார் என்றால், அவரை படைத்தவர் யார்."**

இதற்கு பல விளக்கங்களை சொல்லலாம் ஆனால் இந்த கேள்வியுடன் இருப்பவரை திருப்தி படுத்தவே முடியாது.

இந்த கேள்வியோடு இருப்பவர்களுக்கு நான் ஒன்று சொல்கிறேன், எல்லா மனிதர் வாழ்விலும் கடைசி காலம் வரும், இதையும் தாண்டி இறுதி கட்டம் வரும் அப்போது கேள்வி கேட்கும் நீங்கள், அவரே.

1. ஆரம்பமில்லாதவர்
2. முடிவு இல்லாதவர்
3. வடிவு இல்லாதவர்
4. வரம்பு இல்லாதவர்
5. அளக்க முடியாதவர்
6. சாவாமை உள்ளவர்
7. நித்திய ஒளியாய் இருக்கிறவர்
8. நித்திய மானவர்
9. அளவிட முடியாத அளவுக்கு அளவிட முடியாதவர்,

என்று உணர்வீர்கள்.

1. Beginingless
2. Endless
3. Formless
4. Boundry Less
5. Immeasurable
6. Immortal
7. Ever Glowing
8. Ever Lasting
9. Infinitely Infinite

13. தேவசிருஷ்டிப்பின் மகத்துவம்

தேவன் அளவிடமுடியாத அளவுக்கு அளவிட முடியாதவர், **(He is infinitely infinite)** என்று கூறினேன், அதை இப்போது பார்ப்போம். நாம் வாழும் இப்பிரபஞ்சம் தேவனுடைய அனந்த ஞானத்தினால் சிருஷ்டிக்கப்பட்டது, இதை சிருஷ்டிப்பின் ஆகமம். 1:1 ......ல் பார்த்தோம்

இதை இயக்குபவர் தேவனே! தேவனே!! **அவருடைய அளக்க முடியாத, சர்வ வல்லமையுள்ள, மகிமை பொருந்திய பராக்கிரமம்** எல்லா கேலக்சியையும் அதன் நட்சத்திரங்களையும் அதனதன் நிலையில் நிலைநிறுத்தினவர், ஒவ்வொன்றிற்கும் அதனதன் சுற்றுவட்டத்தையும் நிர்ணயித்துள்ளார்.

இந்தப் பிரபஞ்சத்தைக் குறித்த ஆழங்களை எந்த மனிதனாலும் அறிய முடியவில்லை. இந்தப் பிரபஞ்சத்தை அறிய மனிதன் எடுக்கும் முயற்சி எல்லாம் என்ன நிலையில் உள்ளது என்று பார்ப்போம். இணைய – தளம் மூலம் சேகரித்த தகவலை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகிறேன்.

கேலக்சி, (GALAXY)

இப்பிரபஞ்சம் கூட்டம் கூட்டமாக நட்சத்திர கோளங்களால் நிறைந்து உள்ளது. இந்த நட்சத்திர கோளங்களைத்தான் கேலக்சி என்று அழைக்கிறார்கள். சுமார் 12,500 கோடி கேலக்சி, இப்பிரபஞ்சத்தில் உள்ளது, என்று 1999–ல் அறிவிக்கப்பட்டது.

விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் அதி நவீன, வானொலி தொலை நோக்கி மூலம், தெளிவற்று மங்கலாய் தெரிந்த இடங்களில் கேலக்சி நிரம்பி இருப்பதாக தெரிய வந்துள்ளது. எனவே தற்பொழுது ஜெர்மன் சூப்பர் கம்ப்யூட்டர் உதவியுடன் சுமார் 50,000/– கோடி கேலக்சி இப் பிரபஞ்சத்தில் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. விஞ்ஞானிகளால் எத்தனை கோடி கேலக்சி உள்ளது என்று திட்டவட்டமாய் அறிவிக்க முடியவில்லை.

கேலக்சி ஒவ்வொன்றும் சிறியதும், பெரியதுமாக உள்ளது, சிறிய கேலக்சி பத்துலட்சம் நட்சத்திரங்களை உள்ளடக்கியது. பெரிய கேலக்சி – லட்சம் கோடி நட்சத்திரங்களை உள்ளடக்கியது.

பால்வெளி கேலக்சி

நாம் வாழும் கேலக்சியின் பெயர் பால்வெளிகேலக்சி

இதில் சுமார் 40,000 கோடி நட்சத்திரங்கள் உள்ளன என்று **வான சாஸ்திர பௌதிக விஞ்ஞானிகள்** கருதுகிறார்கள், இதன் மத்தியில் ஒரு தட்டு உள்ளது. அதன் நடு பகுதி குமிழ்போல உள்ளது. சூரியன், சந்திரன், பூமி.... இவை எல்லாம் பால் வெளி கேலக்சியில் உள்ள ஒவ்வொரு நட்சத்திரங்கள்.

அப்படி என்றால் தேவன் எவ்வளவு பயங்கரமானவர் பாருங்கள், பால்வெளி கேலக்சியின் விட்டம் ஒரு லட்சம் ஒளி ஆண்டுகள், ஒரு ஒளி ஆண்டு என்பது சுமார் 10 லட்சம் கோடி கி.மீ. என்று பார்த்தோம், இதை நன்கு புரிந்து கொள்ளும் விதமாய் விளக்குகிறேன்.

ஆகாய விமானத்தில் ஒருவர் மணிக்கு 1500 கி.மீ. வேகத்தில் பறந்தால், ஒரு ஒளியாண்டை கடக்க தேவைபடும் காலம் 7 லட்சம் ஆண்டுகள். பால்வெளி கேலக்சியை கடக்க தேவைப்படும் காலம் 7000 கோடி ஆண்டுகள். அப்படி என்றால், சுமார் 80 வருடம் ஆயுசை உடைய மனிதன் தன் வாழ்நாளில் எதை அறிய முடியும். மேலும் ஒரு கேலக்சியை இன்றுள்ள எல்லா தொழில் நுட்பம் மூலமும், முழுமையாய் பார்க்கமுடியவில்லை. இப்படி இருக்க 50,000 கோடி கேலக்சியை மனிதன் எப்படி அறியமுடியும் ?

நாம் தோராயமாக இப்பிரபஞ்சத்தில் எவ்வளவு நட்சத்திரம் உள்ளது என்று பார்ப்போம்.

$= (50{,}000 \times 10^7)\ (100 \times 10^7)$

$= 5 \times$ (1000 கோடி) (1000 கோடி) $= 5 \times 10^{20}$

இதை மனிதன் தன் வாழ் நாளில் எண்ண முடியாது ஆனால் தேவனோ,

சங்கீதம்– 147:4 –யை பார்ப்போம்

“அவர் நட்சத்திரங்களின் இலக்கத்தை எண்ணி, அவைகளுக்கெல்லாம் பேரிட்டு அழைக்கிறார்.”

எல்லா கேலக்சியும் அவரை சுற்றி வலம் வருகிறது. அவருடைய பிரசன்னம் இப்பிரபஞ்சத்தில் நிழலாய் படர்கிறது.

இத்தனை பயங்கரமான சிருஷ்டிகர் எப்படி பட்டவர்

(I)	**சர்வ வல்லவர்**	**(Omnipotent)**
(ii)	**சர்வ ஞானி**	**(Omnitient)**
(iii)	**சர்வ வியாபி**	**(Omni-Present)**
(iv)	**சர்வத்துக்கும் சக்தி ஊட்டுபவர்**	**(Omni-Energizer)**

இப்போது நாம் வாழும் பால்வெளி கேலக்சியை பற்றி உள்ள தகவலையும் வீடியோ ஒளிப்பதிவையும் பாருங்கள். தேவ மகிமையையும், மகத்துவத்தையும் உணர்ந்து கொள்ளுங்கள் அறிந்து கொள்ளுங்கள்.

கேலக்சி வீடியோ 13–வது அத்தியாயத்தில், you tube :
"GOD CREATOR HIS LEGAL MANUAL" –யை பார்க்கவும்

நாம் வீடியோவில் பார்த்த, கேலக்சி மண்டலத்தை சிருஷ்டித்தவர் யார் ?

1. **யோபு – 26:7, அவர் (தேவன்) உத்தரமண்டலத்தை வெட்ட வெளியிலே விரித்து, பூமியை அந்தரத்திலே தொங்க வைக்கிறார்.**

2. **எரேமியா–10:12, 51:15, அவரே பூமியைத் தம்முடைய வல்லமையினால் உண்டாக்கி, பூச்சக்கரத்தைத் தம்முடைய ஞானத்தினால் படைத்து, வானத்தை தம்முடைய அறிவினால் விரித்தார்.**

அவருடைய இந்த சிருஷ்டிப்பு எதை வெளிப்படுத்துகிறது ?

சங்–19:1, "வானங்கள், தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது".

அவருடைய பராக்கிரமம் 50,000/– கோடி கேலக்சியையும் அதை சேர்ந்த நட்சத்திரங்களான பல கோடி டண் எடையுடைய பூமி, சந்திரன், சூரியன் .------- அனைத்திற்கும் சுற்றுவட்டத்தை நிற்ணயித்தவர், சுமார் 80 கிலோ மனிதனை அவன் சுயவிருப்படி திறந்த தடத்தில் நடத்துகிறார்.அவர் இரக்கத்தில் மிகுந்து நிற்கிறபடியால், மனிதர்களாகிய நாம் பிழைத்து நிற்கிறோம்.

14. தேவநீதியின் மகத்துவம்

ஒரு நாட்டில் நீதியும் நியாயமும் மக்கள் வாழ்க்கையிலும், அதிகாரங்களிலும் , சரியாய் இருந்தால் அந்த நாட்டில் மழையும், வெயிலும் அதனதன் காலத்தில் நேர்த்தியாய் இருக்கும். **இந்த தத்துருபமான உண்மை காட்சியை <u>ஆமோஸ்.–4:7,8</u>– ல் பார்க்கவும். Further -**

"He automized and energized his pivoted Judiciary below on and above earth."

அதாவது அவர் தனது பாரபட்ச மற்ற நீதியை தனது வல்லமையால் தானாக இயங்க செய்து (1) பூமியின் கீழ் (2) பூமியில் (3) பூமியின் மேல் உள்ள இடங்களில் செயல்பட வைக்கிறார், அதை இப்போது பார்ப்போம்.

யோபு 28:26 **" மழைக்குத் திட்டத்தையும், இடிமுழக்கத்தோடே கூடிய மின்னலுக்கு வழியையும் ஏற்படுத்துகிறார்**

யோபு 37:11 **"அவர் நீர்த்துளிகளை மேகத்தில் ஏற்றி, மின்னலினால் மேகத்தை சிதற பண்ணுகிறார்".**

யோபு 37:12 **"அவர் அவைகளுக்குக் கட்டளையிடுகிற யாவையும் அவைகள், பூச்சக்கரத்தில் நடப்பிக்கும் படி அவர் அவைகளைத் தம்முடைய ஞான ஆலோசனைகளின்படியே சுற்றித் திரியப் பண்ணுகிறார்".**

யோபு 37:13 **"ஒன்றில் தண்டனையாகவும், ஒன்றில் தம்முடைய பூமிக்கு உபயோகமாகவும், ஒன்றில் கிருபையாகவும், அவைகளை வரப்பண்ணுகிறார்".**

அவரே நீர்த்துளிகளை மேகத்துக்கு ஏற்றுகிறவர், வறண்ட மேகங்களையும், நீர் துளிகளை உள்ளடக்கிய கருவுண்ட, மேகங்களையும் மின்னலினால் சிதறப்பண்ணுகிறார். அவர் ஞான ஆலோசனையின் படி ஆகாய மண்டலத்தில் மேகங்கள் சுற்றித்திரிகிறது.

அவர் கட்டளைப்படி எந்த நாட்டிலே, எந்த பாகத்தில் பயிர் விளைய வேண்டும், எந்த நாட்டிலே எந்த பாகத்தில் பயிர் அழிய வேண்டும் என்பதை தீர்மானித்து, மேகங்கள் ஆகாய மண்டலத்தில் நிலை கொள்கிறது.

ஏனெனில் அவர் கிருபைக்கு பாத்திரமாய், இரக்கத்திலும், நீதியிலும் வாழும் சிலமக்கள் குறிபிட்ட இடத்தில் இருந்தால், அந்த மொத்த இடமும் தேவ கிருபையால் செழிக்கவும், நிலத்தடி நீர் ஏரிகள் நிரம்பவும் பண்ணுகிறார்.

தாறுமாறாக வாழும் மக்கள் மிகுந்து நீதியில் வாழும் மக்கள் இல்லாதபட்சத்தில், அப்படிப்பட்ட மக்கள் குடியிருக்கும் இடங்கள் தேவ இரக்கத்தை இழந்து, தண்டனையாய், பெரு வெள்ளத்தை சந்திக்கவும், மழை இல்லாத வறட்சியை சந்திக்கவும் செய்கிறார்.

இவ்வாறாக தேவன் தனது பாரபட்சமற்ற நீதியை தனது வல்லமையால் (1) பூமியின் கீழ் (2) பூமியில் (3) பூமியின் மேல் உள்ள ஆகாய மண்டலத்தில் விளங்க பண்ணுகிறார்.

மேலும் தேவநீதி கருவறையில் இருந்து கல்லறை வரை, இன்னும் அந்நாள் வரை தொடர்கிறது.

<u>கருவறையிலே</u>

சங்கீதம்–139:16, "என் கருவை உம்முடைய கண்கள் கண்டது, என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும் உமது புத்தகத்தில் எழுதியிருந்தது".

(I) அதாவது கருவறையிலே கண்ணுக்கும் மூளைக்கும், காதுக்கும் மூளைக்கும் உள்ள செயல்பாட்டை இணைப்பது, **ஆண்/பெண்** ஆக **வனைவது** தாயும் தந்தையும் அல்லவே, அவர் நீதியின் படியே வடிவமைக்கப்பட்டு அங்கே அங்கங்கள் முழு உருப்பெறுகிறது.

(ii) நீதிமானின் சந்ததியை அவர் எவ்வாறு வனைகிறார் என்பதை யோபு 42:15–யை படித்து அறிந்து கொள்ளுங்கள் உணர்ந்து கொள்ளுங்கள்.

கல்லறையிலே : Iராஜாக்கள் (21:1–23) புத்தகத்தில் யேசபேல் என்ற ராஜக் குமாரத்தியை பார்க்கிறோம். அவள் தன் வாழ்நாள் முழுவதும் தாறுமாறாய் வாழ்ந்தது மட்டுமல்ல, ஒரு நீதிமானை கொலை செய்து அவர் திராட்சை தோட்டத்தை தனக்கு சொந்தமாக்கி கொள்கிறாள். அவள் முடிவோ மனுக்குலத்துக்கு ஒரு பாடமாக உள்ளது. அவளை அடக்கம் பண்ண போகும் போது அவளுடைய தலையோட்டையும் கைகளையும், கால்களையும் தவிர வேறொன்றும் தேறவில்லை. எல்லாம் நாய்களுக்கு இரையானது. இதை IIராஜாக்கள் 9:35 –யில் பார்க்கலாம்.

எலிசா தீர்க்கத்தரிசி : இதே நேரத்தில் நீதியில் தன் வாழ் நாட்களை கழித்த எலிசா என்ற தீர்க்கத்தரிசியை பார்க்கிறோம். கனம் பொருந்திய ஒரு ஸ்திரி அவரை பார்த்து தன் கணவரிடம் கூறகிறார், "தேவனுடைய மனிதனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன்." ஆனால் இவரோ நோய்வாய்பட்டு மரிக்கிறார். ஏன் ஒரு நீதிமானுக்கு இந்த முடிவு என்ற இந்த கேள்வி மனுகுலத்தில் உள்ளது . இதற்குரிய பதிலை சட்டப்புத்தகத்தில் பார்ப்போம்.

"இதோ நீதி மானுக்கு பூமியில் சரிக்கட்டப் படுமே.........நீதி– 11:31".

I கொரிந்– 11:32, **"நாம் நியாயம் தீர்க்கப்படும்போது உலகத்தோடே ஆக்கிணைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே சிட்சிக்கப்படுகிறோம்" .**

அதே நேரத்திலே பக்கத்து ஊரை சார்ந்த ஒரு நீதிமான் மடிந்து போகிறார். அவர் சடலத்தை அடக்கம் பண்ண சுமந்து வந்தபோது எதிரிகள் வருவதை கண்டு அதை பக்கத்தில் உள்ள எலிசாவின் கல்லறையில் போட்டுவிட்டு ஓடுகிறார்கள். சடலம் எலிசாவின் உடம்பை தொட்டவுடன் தேவ நீதி வெடிக்கிறது. சடலம் புது உயிர் பெற்று எழும்பியது, இதன் மூலம் தேவ தீர்க்கத்தரிசி மகிமை அடைகிறார், இதை நாம் II. ராஜாக்கள் 13:21,ல் பார்க்கலாம்.

மேற்கூறிய யாவும் தேவ நீதியின் மகத்துவத்தை உலக மக்களுக்கு உணர்த்துகிறது. இவ்வாறாக தேவன், அவர் நீதியை கருவறையில் இருந்து கல்லறை வரை, **மேலும் அந்நாள் வரை தொடர்கிறார்.**

15. தேவ சட்டபுத்தகத்தின் சாரம்

ஒரு புத்தகத்தின் சாரம் அந்த புத்தகத்தின் கடைசி அதிகாரத்தில் இருக்கும் என்றும், மேலும் தேவநீதி அந்நாள் வரை தொடரும் என்று கூறினேன்.

வெளி – 22:11: **அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும், அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும், பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்.**

வெளி –22:12: **இதோ சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது".**

அநியாயம் என்பது நீதிக்கு எதிர்மறை அசுத்தம் என்பது பரிசுத்தத்திற்கு எதிர்மறை, மொத்த சட்டப்புத்தகத்தின் சாரமும் சுருங்கி நீதியும் பரிசுத்தமும் என்று ஆகிறது. தேவன் இந்த இரண்டு கனிகளைத் தான் எதிர்பார்க்கிறார். அவர் உலகத்தை நியாயம் தீர்க்க வரும்போது இந்த இரண்டு கனிகளின்படி நீதி வழங்குவார்.

பூலோகத்தில் எவனொருவன் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும் அவர் மகாநீதிபரர் என்றும் உணர ஆரம்பிக்கும்போது தேவஒளி கிருபையாய் அவனை தொடர்கிறது. அதன்விளைவாக அவன் தவறைநோக்கி ஓடும் போதெல்லாம் **தேவகரத்தில்** இருந்து தண்டனை உடனுக்குடன் இறங்கி **குறுக்கிடுகிறதை** உணர்கிறான். அதனால் பாவ வழியை களைந்து திரும்பித் தேவ நீதிக்கு நேராய் ஓடுகிறான். **அவர் கரத்தை உணராதவனோ** தன் வழி தடத்தில் (சுயநீதியில்) தொடர்ந்து ஓடுகிறான்.

எந்த ஒரு மனிதனும் தன் சுய முயற்சியினால் பரிசுத்தமாக முடியாது, 1யோவான் – 5:17, சொல்கிறது **"அநீதி எல்லாம் பாவம்......."** அப்படி என்றால் நீதி எல்லாம் பரிசுத்தத்திற்கு நேராய் நடத்தும், இப்போது எபிரேயர் 5:13 யை பார்ப்போம் **"பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான்**. ஆதலால் பரிசுத்த தேவன் பரிசுத்தத்தில் குழந்தையாய் இருக்கிற உன்னை நீதியின் தேவன் தூக்கி எடுப்பார், மார்போடு அணைத்துக்கொள்வார், நீ பரிசுத்தத்தின் மேல் பரிசுத்த மடைந்து **அவரை மகிமையிலே சந்திப்பாய்.**

16. இந்த செய்தி தேவன் முன்குறித்தது

நான் ஒரு செய்தியாளர் அல்ல, ஒரு பொறியாளர். நான் என்னை பின் நோக்கி பார்த்தபோது, தேவன் மகா நீதிபரர் என்பதை உணர்ந்தேன். தேவன் இடைபட ஆரம்பித்தார். தான் எவ்வளவாய் வல்லமை உள்ளவர் என்பதை எனக்கு உணர்த்தினார். 29/08/2009 அன்று பெயர் சொல்லி அழைத்து, **“நான் இப்போது பார்க்கிறேன் யார் அந்த சகோதரன் பால்தாஸ், Mr.பால்தாஸ் என்று ஆரம்பித்து .... இதோ தேவனுடைய வார்த்தையாகிய ஊன்று கோல் உன்னை தூக்கி நிறுத்துகிறது, நீ எழுந்து நட”** என்று மூன்று ஆண்டுகளுக்கு முன் தேவ ஊழியர் N. **சாது பால் சாலமோன்** அவர்களால் தீர்க்க தரிசனம் உரைக்கப்பட்டது. அதன் நிறைவேறுதல் தான் இந்த தேவ செய்தி. தேவனே ஒரே ஒரு செய்தியை கொடுக்க என்னை நடத்தினார்.

நடத்தினார் என்று சொல்வதை விட இழுத்தார் என்று சொல்வது சரி என்று நினைக்கிறேன், ஏனென்றால் அதற்காகவே **ஜாண் தாஸ்** என்ற தேவதாசனை அனுப்பினார். அவர் அவரது அலுவலக காரியமாக பிப்ரவரி – 2012–ல் என்னை சந்தித்தார். எல்லாரிடமும் சொல்வது போல சட்டப்புத்தகத்தின் வார்த்தையை கூற ஆரம்பித்தேன், உடனே அவர் என்னை செய்தி கொடுக்க அழைத்தார் நான் மறுத்தேன். தேவனே என்னை அடித்து இழுத்தார். அதாவது சர்க்கரை வியாதிக்கு 15 வருட காலம் தடைபண்ணபட்ட மாத்திரையை பயன் படுத்தி வந்தேன், ஏனென்றால் அந்த ஒரே வகையான மாத்திரை தான் எனக்கு ஒத்துக்கொண்டது. அந்த மாத்திரையும் செயல் இழக்கவே, எல்லா உடலின் பாகங்களும் பாதிக்கப்பட்ட நிலையில், மரணத்தை நெருங்கினேன். தேவன் ஆச்சரியமாய் என் மனைவியின் மூலமாக ஒரு நீதிமான் ஆன மருத்துவரை நோக்கி நடத்தப்பட்டேன், மீண்டும் உயிர் பெற்றேன். பலம் பெற்றேன். பின் ஜாண் தாஸ் அவர்களை நான் தொடர்பு கொண்டு செய்தி கொடுக்க வருகிறேன் என்று கூறினேன். தேவனை பற்றி நான் உணர்ந்தவைகளை என் சிந்தனையில் கொண்டு வந்தார், அந்த செய்தியை தான் இங்கு நீங்கள் படித்தீர்கள். **எல்லா கனமும் மகிமையும் நீதியின் தேவனுக்கே.**

17. அவரே பரிசுத்த பலியான இவர்

கடைசியாக, மனுக்குலம் சிருஷ்டிகராகிய தகப்பனின் அன்பை உணராமல், தன் வழியை தானே தெரிந்துகொண்டு தனக்கு தோன்றிய வழிகளில் எல்லாம் தாறுமாறாக வாழ ஆரம்பித்த போது.

சிருஷ்டிகர் தன் அனாதி சினேகத்தை, அன்பை, அன்பின் ஆழத்தை வெளிபடுத்த சித்தம் கொண்டு விண்ணில் இருந்து மண்ணுக்கு இறங்கினார். கோழி தன் குஞ்சுகளை தன் செட்டையின் கீழ் கூட்டிச் சேர்ப்பது போல அவர் மனுக்குலத்தை அழைத்தார்.

நாமோ செல்வதிறட்சியினாலான ஐசுவரிய மயக்கத்தின் பெருமையில், தவறை செய்ய துணிகரம் கொண்டவர்களாய், தாறுமாறான தாகத்தால் உந்தபட்டு உணர்வற்றவர்களாய், அநீதியாய் **அறைந்தோம், அறைந்தோம், அறைந்து கொண்டே இருக்கிறோம்.**

கழுகு உயரத்தில் வட்டமிடுவதையும், அது உன்னிப்பாய் கவனித்து உலா வருவதையும் உணராத கோழி குஞ்சு, தன் தாயின் அழைப்பை தள்ளி, செட்டையின் வெளியிலே தன்னந்தனியாய் அலைகிறது. எதிர்பாராத நேரத்தில் கழுகு திடீர் என்று கீழ்நோக்கி வந்து கவ்வி செல்கிறது. **போதையில் இருக்கும் குஞ்சு, நிலைமையை அறியாமல், இறுதியில் என்ன நடக்கும் என்பதையும் உணராமல், ஆகாயத்திலே பறந்து கொண்டிருக்கிறோம் என்ற நினைவிலே அக மகிழ்கிறது.**

நாம் மேலே பார்த்த மாதிரியே, இப்பிரபஞ்சத்தின் தேவன் கட்டுபாடு இன்றி அலையும் மனுக்குலத்து மனிதர்கள் மேல் தன் கண்ணை பதித்து. அவர்களைஅவர்கள் வழியிலே நடத்தி கண்சொருகிப்போன நிலைமையிலே, தள்ளாடி தானாய் இடறி குழியில் விழச்செய்கிறான்.

மனுக்குலமோ, தகப்பனின் அடைக்கலத்தின் வெளியில் இருப்பதை பற்றிய உணர்வு அற்று, படைத்தவரை மேல் நோக்கி பார்க்க தவறி, கீழே மண்ணையே நோக்கியே, நோக்கியே பார்த்தவர்களாய், மண்ணோடு மண்ணைச் சேர்க்கிறார்கள், பொன்னோடு பொன்னைச் சேர்க்கிறார்கள், அதுமட்டுமல்ல, நகரம் நகரமாய் உலகையே வலம்வரும் உலக மாமனிதர்களின் செட்டையின் கீழ் அடைக்கலம் தேடி ஓடுகிறார்கள்.

உலக – மா – மனிதர்கள் யார் என்று பார்ப்போம் என்றால், தன்னுடைய வளர்ச்சிக்கு கை கொடுத்த எளியவர் எவரோ, அவர் நிலையில் வாழத் தவறியவர்கள்.

அவரோ இரண்டு கைகளையும் விரித்தவராய் தன் செட்டையின் கீழ் அடைக்கலம் புக அழைக்கிறார். அவர் கையை உயர்த்தி இருந்தால் மனுக்குலம் அழிந்திருக்கும். அவர் கையை விரித்ததால் என்ன நடந்தது என்று பார்ப்போம்

மத்தேயு 27:51 அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல் தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது, பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தது.

மத்தேயு 27:52 கல்லறைகளும் திறந்தது, நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது.

எனவே அண்ட சராசரங்களையும் படைத்த இறைவனுடைய செட்டையின் உள் அடைக்கலம் புக, அவருடைய சட்டப்புத்தகத்தை திறவுங்கள். அப்போது புகும் வழி தெரியும்! புரியும்! பாதுகாக்கப்படுவீர்கள், பாக்கியம் பெறுவீர்கள்.

நீதி 21:21 "நீதியையும், தயையையும் பின்பற்றுகிறவன் ஜீவனையும், நீதியையும், மகிமையையும் கண்டடைவான்".

(தொடர்ந்து பார்க்கவும், மீகா 6:8, ஓசியா 12:6, மத்தேயு 23:23)

தேவனால் முன்குறிக்கப்பட்டு வெளிவந்துள்ள இந்த சிறு பிரதி, தேவ இரக்கத்தையும் தேவ நீதியையும், தேவ மகிமையையும் உணர்த்துவதால் ஒவ்வொருவரையும், ஜாதி, மத, மொழி, இன,பேதமின்றி தேவகரம் நீதிக்கு நேராய் தனித்தனியாய் ஈர்க்கிறது. நீதிமானை விடுவிக்க தேவமகிமை பனியைப்போல் இறங்கி பூச்சக்கரத்தை நனைக்கிறது. அவர்களோ வரும் கொள்ளை நோயையும், பெருவெள்ளத்தின் சுழர்ச்சியையும், சுழற்காற்றையும், பற்றி எரியும் அக்கினியின் உக்கிரத்தையும் அல்லது வர இருக்கும் சூரியனின் வெப்ப கதிர்களையும் உணர்வதில்லை. ஜீவனையும், நீதியையும், மகிமையையும் காண்பார்கள். **எல்லா கனமும் மகிமையும் நீதியின் தேவனுக்கே.**

PART VIEW OF DIAMOND PLANET



MILKY WAY VIEW



MILKY WAY PLAN



1. மறக்கப்பட்ட அல்லது மறைக்கப்பட்ட

நீதியின் வார்த்தை

ஆதியாக.–6:9, 7:1, 15:16, 18:19,25, 49:10,16. **யாத்தி.**–22:22–24, 23:1–8, 24:12, 28:15,30, 34:6,7. **லேவி.**–18:25, 19:15, 32-36, 20:22, 26:41,42. **எண்ணா.**–9:14, 12:6, 15:15, 23:10,19, 31:8. **உபாக.**–1:16,17, 9:4, 10:17,18, 24:10–22, 25:15, 32:4. **யோசுவா.**–10:13, **நியாதி.**–1:6,7. **1சாமுவே.**–8:3. **2சாமுவே.**–12:10,11,12, **யோபு.**–9:15, 21:22, 27:6,17, 29:14, 34:17, 36:7. **சங்கித.**– 1:6, 5:12, 7:11, 9:4,8,16, 10:5, 11:3,5,7, 12:5, 14:5, 17:1,15, 19:8,9, 23:3, 33:1,5, 34:15–21, 35:28, 36:6, 37:6,16,17,18,21,23–33, 37,39, 40:9,10, 48:10, 50:4,6, 55:22, 58:10,11, 68:5,6, 71:19,24, 75:7,10, 84:11, 85:10,11, 89:14, 92:12, 96:13, 97:2,11, 98:9, 99:4, 101:6, 103:17, 106:3, 111:3, 119:62,75,142,160,164, 142:7, 146:8. **நீதிமொழி.**–2:7, 3:32, 4:18, 10:21,24,29, 11:5,8,18, 12:5,12,13,17,21,28, 13:5,6,9,25, 14:11,14,34, 15:6,9,19,28, 16:8,31, 17:15,23,26, 18:10, 21:3,21, 24:16, 25:26, 28:5 ,29:25–27. **பிரசங்கி.**–3:16, 5:8, 7:15,16,20, 8:11,14, 11:9, 12:14. **ஏசாயா.**–1:10,17,21–23, 3:10, 5:16, 9:7, 11:3-5, 26:7-9, 28:17, 29:6,13, 30:18, 32:1,17, 33:1,15,16, 41:2,10,21, 42:3,21, 43:26, 46:12, 48:18, 49:24,25, 50:8, 51:1,7,8, 53:8, 54:4, 56:1, 57:1,2, 59:14-17, 61:2,8, 64:5,6. **எரேமியா.**–5:1, 8:7,8, 9:23,24, 11:20, 17:11, 22:13-16, 23:5,6. **புலம்பல்.**–1:18. **எசேக்கிய.**–18:5,9, 22:14. **தானியேல்.–2:21,** 12:10. **ஓசியா.**–4:1-6, 12:6, 14:9. **ஆமோஸ்.**–5:7,11-14, 6:12. **மீகா.**–3:1-11, 6:8. 7:2,3. **ஆபகூக்.**–1:12,13. **செப்பனியா.**–2:3. **மல்கியா.**–3:18, 4:1,2,

மத்தேயு.–3:15, 5:6,10,18-20, 6:33, 10:34, 16:3 21:31,32, 25:34-46, 27:19. **மார்க்.**–6:20. **லூக்கா.**–1:6, 2:25, 4:27, 7:29, 15:7, 18:5,7,10-14, 23:41-43, **யோவான்.**–3:19,20, 5:22, 7:18,24, 8:15,16, 10:35, 12:48, 14:23-24, 16:8, 17:17, 18:37. **அப்போஸ்.**–3:14, 4:19, 8:33, 17:31, 24:24,25, **ரோமர்.**–1:17,18, 2:1,7,8,13-16, 3:22-28, 4:3,5,13,25, 5:9,18-,21, 6:18,20,23, 8:11,13,14,28,30, 9:30, 10:3,4, 14:17. **1கொரிந்.**–1:31, 5:10-13, 6:2,3, 9:25, 10:11, 15:34. **2கொரிந்.**–5:10,21, 6:14, 9:9,10. **கலாத்தியர்.**–2:16,17,21, 3:13. **எபேசியர்.**–4:24, 5:9, 6:9,14. **பிலிப்பி.**–3:13,**கொலே.**–4:1. **2தெசலோ.**–1:6-10. **1தீமோத்.**–1:9-11, 3:16, 6:6,8,10,11. **2தீமோத்.**–2:13,19. **தீத்து.**–2:11-14, 3:1-6. **எபிரேயர்.**–5:13, 6:1-8, 9:27, **யாக்கோபு.**–2:13, 5:9,16. **1பேதிரு.**–1:13-17, 23-24, 3:12,18-22. **2பேதிரு.**–1:1, 2:5. **1யோவான்.**–1:7,9, 2:5-7,16,29, 3:4,7-9. **வெளி.**–12:11, 15:3. 18:5,8,18,24, 19:8,11-13, 20:13-14, 21:2,10,11, 22:11-13.

2. தேவ இரக்கமும் கிருபையும்

யாத்தி.–22:21-27 , 34:6,7. **உபாக.**–4:31, 15:7-11. **யோபு.**–34:19, **சங்கீதம்.**–9:9,12,18, 10:9,17, 22:24 33:9, 37:26, 40:11, 41:1,2, 52:8, 59:10, 68:5,6,10, 69:33, 72:4,12,13, 94:18, 103:13,17, 112:9,113:6-8, 119:77,156, 136:1-26, 140:12, 145:14,18. **நீதிமொழி.**–3:27,28, 14:31, 17:5, 19:7,17, 21:13, 28:27, 30:8,9, 31:20. **பிரசங்கி.**–5:8,12,ஏசாயா.–25:4, 30:18, 32:6,7,8, 41:17, 45:22, 58:7-11, 66:2. **எரேமியா.**–31:3,25,26. **புலம்பல்.**–3:22. **எசேக்கி.**–16:63. **ஓசியா.**–6:6, 12:6, 14:3. **மீகா.**–6:8.

மத்தேயு.–5:7, 12:7, 23:3, 25:34-46. **லூக்கா.**–6:36-38, 10:30-34, 16:19-23. **அப்போஸ்.**–9:36, 10:3,4,34,35, 13:39, 17:26,27. **ரோமர்.**–2:4,6,7, 4:4, 10:3. **2கொரிந்.**–9:9,10. **கலாத்தியர்.**–6:7,9, **எபேசியர்.**–2:4,5,8, 3:18. **எபிரேயர்.**–9:22. **யாக்கோபு.**–2:13.

3. இருளின் வார்த்தை இனிக்கும் ஒளியின் வார்த்தை அருமருந்து கசக்கும்

ஆதியாக.–3:4,5, **உபாக.**–13:1-3, 18:22, **1ராஜாக்கள்** –22:6-9. **2நாளாக–.**18:1-13. **ஏசாயா.**–1:3,10,13,15,17,21-23,26, 3:12, 9:15,16, 10:15,16, 25:7,9. 28:17, 29:13, 42:18-21, 46:12, 51:7, 52:7, 56:10,11, 61:8.9, 64:4, 65:1. **எரேமியா.**–5:1,13, 26-31, 6:10,13, 7:3,4, 8:7,8, 17:10,11, 23:9,14,16,21,30,31, 29:8-9, 32:33.**எசேக்கி**–13:3, 13:17-19, 18:5-9, 22:25-28, 33:6,7,31, 34:15-22. **ஓசியா.**–4:1-9, 9:7,8, 10:1, 14:9. **ஆமோஸ்.**– 4:2-13, 5:11,12,22,23, 6:3-5, 8:3, 9:9. **மீகா.**–2:11, 3:1,11, 7:2,3. **செப்பனியா.**–3:7, **சகரியா.**–11:17,**மல்கியா.**–1:10, 3:10,

மத்தேயு.–5:18,19, 6:24, 7:15,18-23, 10:8-10,38, 12:18,20, 13:43, 15:4-9, 16:24, 19:17, 21-24, 21:31,32,(+லூக்கா.–7:29), 23:15-19,23,24, 24:11,12,24, **மார்க்.–6:8,9** 7:7, 8:34, 10:25,**லூக்கா.**–10:4, 11:27,28,41, 12:33,34,48,49, 14:27,16:13,15,17, 18:25, 19:45,46.**அப்போஸ்.**–20:29,**ரோமர்.**–1:18, 2:6-8, 22-24, 3:10-14, 16:17,18. **2கொரிந்.**–11:4, 13-15,**எபேசியர்.**–5:3,4, **பிலிப்பி.**–4:8, **கொலே.**–2:8,9,12,14,15,21, **1தெசலோ.**–4:3-7, **2தெசலோ–** 1:6-10. **1தீமோத்.**–4:1-4, 5:24, 6:6,8,10,11, **2தீமோத்.**–2:15,16,19,24,26, 3:16,17, 4:3,4, **தீத்து.**–1:16, **எபிரேயர்.**–10:22, 26-31, 12:7-10, **யாக்கோபு.**–2:2-4,9,13,17,19,26, 3:1,13, 5:1,9. **1பேதிரு.**–1:13-16. **2பேதிரு.**–1:4,6,9, 2:1-3. **1யோவான்.**–2:5,7,16, 3:7,16,17, 5:3, **2யோவான்.**–1:7, **யுதா–4.**

4. தேவன் கூர்ந்து நோக்குகிறார்

1சாமுவே.–3:14. **நீதிமொழி.**–14:31, 17:5, 19:17, 21:3,13, 28:27, **ஏசாயா.**–1:11,13, 58:7-11, 61:8, 66:3. **ஓசியா.**– 6:6. **ஆமோஸ்.**–4:1-5, 5:21,23, **ஆகாய்–**2:11-14. **மல்கியா**1:10, **மத்தேயு.**– 6:20, 9:13, 12:7, 15:4-9, 23:16-19. **மார்க்.**– 12:33. **லூக்கா.**–12:33. **அப்போஸ்.**–20:34,35. **2கொரிந்.**–9:9,10. **கலாத்தியர்.**–6:7,9. **1தீமோத்.**–6:18. **எபிரேயர்.**–13:16

If you like to receive the message in English or this message has enlighten your inner man and brought you closer to "God -The Creator", do share your experience with me.

E-mail to , mpauldas1@gmail.com

mpauldas@rediffmail.com

CELL : +91 9840 861 834 ,

& + 91-44-24993596, + 91-44-24670005

Write to :

M.Paul Das

4th ,Floor , Sindur Tower

160 / 95,Luz Chrch Road

Chennai-600 004, INDIA

TO KNOW THE BIRTH OF THE BOOK

(VIDEO IN), **YOUTUBE:** "GOD CREATOR BIRTH OF THE BOOK "

(BOOK & VIDEO IN), **FACE BOOK:** " godcreatorbook "

Message book in English is available in E.L.S Vepery

& E.L.S. Dowton, Chennai, India

Year of Publication-2012

"இறைவன்
இப்பிரபஞ்சத்தை இயக்குபவர் அவருடைய சட்டம்"
LIGHT ZONE
DARK ZONE
GRAPH
P - 26